# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV        Issue 12        March 2015**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 2 |
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 3 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 17 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 19 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள். | 23 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 25 |
| மனிதன் கண்ட நீதியும் தெய்வம் வழங்கும் நீதியும் . . . . . . . . . . | 27 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 36 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 52 |
| **அன்னை இலக்கியம்** | |
| தாஜுதீன் . . . . . . . . . . . . . . . . . | 55 |


**ஜீவியத்தின் ஓசை**

*விரோதியான*
*நண்பன்*
*சத்திய ஜீவிய*
*கருவி*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## இம்மாதச் செய்தி

# ஆணுக்குப் பெண்.
# ஆண்டவனுக்கு
# ஆசிரமம்.



## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

கர்மயோகி

### *27. சப்த ஜீவன்*
(Tamil Summary)

எழுவகை வாழ்வுக்கான விதிமுறைகளை நாம் ஆராய்ந்தோம். பண்டைய முனிவர்கள் எல்லா பிரபஞ்ச வாழ்வுக்கும் அடிப்படையாக வரையறுத்திருந்த எழு பெரும் வகைகளான வாழ்க்கையை கூர்ந்தாய்வு செய்தோம். அவற்றின் சிருஷ்டி மற்றும் பரிணாமத்திற்குரிய நிலைகளை நாம் இப்போது கண்டறிந்தோம். அதன் மூலம் எந்த ஞானத்தை அடைய நாம் இதுவரை தீவிர முயற்சி செய்தோமோ அந்த ஞானத்தின் அடிப்படையை அடைந்தோம். பிரபஞ்சத்தில் நாம் காணும் எல்லா உண்மைகளுக்குமான ஆரம்ப நிலை, வரம்பு, மற்றும் அதன் முதலும் முடிவுமான அனைத்து உண்மைகளும் மூவகைத் தத்துவமான சச்சிதானந்தம் என்று முடிவு செய்தோம். இத்தத்துவம் கடந்ததும் அனந்தமுமான ஜீவன், ஜீவியம் மற்றும் ஆனந்தம் ஆகும். இது தெய்வீக ஜீவனின் சுபாவம் ஆகும். ஜீவியத்திற்கு இரு நிலைகள் உண்டு. ஒன்று அறிவொளி-யூட்டும், தன்னையறியும் நிலையும் திறனும். அடுத்தது சுய சக்தி படைத்த நிலையும் திறனும் ஆகும். இவையிரண்டின் மூலம் ஜீவன் அசைவற்ற சமநிலையிலும் அல்லது இயக்க நிலையிலும் தன்னை தனக்கு உடைமையாக்கிக் கொள்கிறது. தன் படைக்கும் செயலில், சர்வ வல்லமை கொண்ட தன் ஜீவியத்தால் தன்னுள் அனைத்தையும் அறிகிறது. மற்றும் தன் எல்லாம் அறிந்த சுய வலிமையால் பிரபஞ்சத்தையும் அதன் ஆற்றலையும் உருவாக்கி, ஏற்று நடத்துகிறது. பரம்பொருளின் ஆக்கபூர்வமான இச்செயல்பாட்டின் கருவான இடம் சத்திய ஜீவியம் எனும் நான்காம் விதியில் உள்ளது. இந்த இடைப்பட்ட தத்துவம் முழு எண்ணம் என்று அழைக்கப்படும். அதில்

தெய்வீக ஞானம் அதன் வாழ்வோடும், சுய உணர்வோடும் மற்றும் திடமான உறுதியோடும் இணைந்துள்ளது. இவ்வுறுதி அதன் ஞானத்துடன் பூரணமாக ஒன்றியுள்ளது. தெய்வீக ஞானம், பொருட்களின் சலனம், ரூபம் மற்றும் அதன் சட்டத்தை குறைவற வளர்க்கிறது. இந்த பொருட்களின் சட்டம் அவைகளின் சத்தியத்திற்குச் சரியாக ஏற்ற நிலையில் உள்ளது. அவைகள் அதன் வெளிப்பாட்டின் தனிச்சிறப்புடன் சுமுகமாக உள்ளன.

சிருஷ்டி ஒரு தத்துவத்தைச் சார்ந்து உள்ளது. இது ஒருங்கிணைந்த தத்துவமான ஒருமை மற்றும் பன்மைக்கிடையே இயங்குகிறது. அது எண்ணம், சக்தி, உருவம் சிறப்பான பலவகைகளாகப் பிரிந்ததாகும். இவை மூலமான ஒருமைப்பாட்டின் வெளிப்பாடாகும். சிருஷ்டி என்பது ஒரு சாசுவதமான ஐக்கியம். எண்ணிறந்த உலகங்களுக்கு இவ்வைக்கியம் அடிப்படை. அவைகளின் லீலையை அது சாத்தியமாக்குகிறது. சத்திய ஜீவியம் இரட்டைத் திறனுடன் தொடர்கிறது. இத்திறன் காலத்தைக் கடந்ததும் காலத்திற்குட்பட்டதுமான ஞானமாகும். அது அவசியமான ஒருமைப்பாட்டில் தொடங்கி அதிலிருந்து வேறுபாட்டிற்குச் செல்கிறது. அது தனக்குள் அனைத்தையும் தானாக - ஒன்றாக அறிகிறது. அது தனக்குள் அனைத்தையும், அதன் உறுதிக்கும் ஞானத்திற்குமுண்டான பொருட்களாகப் பிரித்தும் உணர்கிறது. அதன் ஆரம்ப, தன்னையறியும் நிலையில் யாவும் ஒன்றான ஜீவனாக உளது. அவை ஒரு ஜீவியம், ஒரு உறுதி மற்றும் ஒரு சுய ஆனந்தம். பொருட்களின் முழுச் சலனம் அந்த ஒன்றின் சலனம். சத்திய ஜீவியம் ஒருமையிலிருந்து பலவாக மாறும் செயலைத் தொடர்கிறது. பிறகு அது பன்மையிலிருந்து ஒருமைக்குச் செல்கிறது. இவ்விரு செயல்களுக்கிடையே அது ஒரு சீரான தொடர்பை ஏற்படுத்துகிறது. இச்செயல் இவைகளுக்கிடையே பிரிவினைக்கான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் அது உண்மையில் பிரிவினை இல்லை. அது சூட்சுமமான, விலகாத பிரிவினை. அது பிரிக்க



முடியாத ஒன்றதனுள் உண்டான வரையறையும் தீர்மானமும் ஆகும். சத்திய ஜீவியம் என்பது தெய்வீக மறையியல் ஞானமாகும். அது உலகைச் சிருஷ்டிக்கிறது, ஆள்கிறது மற்றும் ஆதரவளிக்கிறது. இது ஒரு மறைபொருளான பேரறிவாகும். இந்த ஞானம் நம் அறிவுக்கும் அறியாமைக்கும் ஆதாரமாக உள்ளது.

மனம், வாழ்வு, ஜடம் என்பவை இவ்வுயர்ந்த தத்துவங்களின் மூன்று அம்சங்கள். பிரபஞ்சத்தைப் பொறுத்தவரையில் இவை அறியாமை எனும் விதிக்குட்பட்டு செயல்படுகின்றன. மேலும் இவை தம் மேலோட்டமான நிலையிலும், வெளித்தோற்றத்திலும், பிரிவினை மற்றும் பன்மை எனும் லீலையை மேற்கொள்ளும் ஏகனை மறந்த நிலையில் உள்ளன. மனம், வாழ்வு மற்றும் ஜடம் தன்னை மறந்த இந்நிலைக்கு உட்பட்டுள்ளன. உண்மையில் இம்மூன்றும், நான்கு பகுதிகள் கொண்ட தெய்வீக சக்திக்குக் கீழ்ப்பணியும் சக்திகளாகும். மனம், பிரிவினையை முடிவு செய்யும் சத்திய ஜீவியத்தின் தாழ்ந்த சக்தியாகும். அது பிரிவினைக்கான இடத்தில் நிலைத்துள்ளது. அது பின்னுள்ள ஒற்றுமையை மறந்துள்ளது. அது சத்திய ஜீவியத்திலிருந்து இழந்த ஒளிவிளக்கத்தை மீண்டும் பெற்றால் ஒற்றுமைக்குத் திரும்ப முடியும். வாழ்வு என்பது சச்சிதானந்தத்தின் ஆற்றலுக்கு அடிபணியும் சக்தியாகும். அது தோற்றத்தை உருவாக்கும் சக்தியாகும். அது தன்னையுணர்ந்த சக்தியின் லீலையை செயல்படுத்துகிறது. அது மனத்தின் பிரிவினைக்குண்டான இடத்திலிருந்து அதைச் செய்கிறது. ஜடம் என்பது ஜீவனின் - சச்சிதானந்தத்தின் - பொருளின் ரூபம். தன்னை தன் ஜீவியம் மற்றும் சக்தியின் செயலுக்கு உட்படுத்தும்பொழுது, சச்சிதானந்தம் இந்த ரூபத்தைப் பெறுகிறது.

மேலும், நான்காம் விதி ஒன்றுளது. அது மனம், வாழ்வு, உடலின் சிக்கலான இடத்தில் வெளிப்படுகிறது. அச்சிக்கலான முடிச்சை நாம் ஆத்மா என்கிறோம். ஆனால் அது இரட்டைத் தோற்றத்தைக் கொண்டது. மேலேயிருப்பது அகந்தை. அது

பொருட்களின் உடைமை மற்றும் ஆனந்தத்திற்காகப் போராடுகிறது. அதன் பின் ஒளிந்திருப்பது உண்மையான சைத்தியத்திற்குரிய ஜீவன். ஆன்மீக அனுபவங்களுக்கு இதுவே உண்மையான உறைவிடம். இது மனிதனுக்குரிய நான்காம் தத்துவத்திற்கான வெளிப்பாடு. இது அனந்தமான ஆனந்தத்திற்கான திட்டம் மற்றும் செயல் ஆகும். ஆனால் இச்செயல் நம் ஜீவியத்தை அடிப்படையாகக் கொண்டது. இது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளது. அவை உலகில் ஆத்மாவின் பரிணாமம் ஏற்படுத்தும் நிபந்தனைகள் ஆகும். இறைவன் இயற்கையாகவே அனந்தமான ஜீவியத்தைக் கொண்டவன். அந்த ஜீவியத்தின் சுய சக்தியால் அதன் வாழ்வு உள்ளது. அந்த அனந்த ஜீவியத்தின் தன்மை தூய்மையானது மற்றும் அனந்தமான பேரின்பமானது. தன்னைத்தானே பெற்றதும், அறிந்ததுமான அதன் நிலை சுய ஆனந்தத்தின் சாரமாகும். பிரபஞ்சமும் அந்த சுய ஆனந்தத்தின் லீலையாகும். அந்த லீலையின் ஆனந்தத்தை அகிலம் முழுவதுமாகப் பெற்றுள்ளது. ஆனால் ஜீவாத்மாவில் அது மறைந்துள்ளது. அறியாமை, பிரிவினை என்ற செயல்பாடுகளினால் அது மறைந்துள்ளது. ஆனந்தம், அடி மனக் குகையிலும், மேலுள்ள பரமாத்மாவிலும் மறைக்கப்பட்டுள்ளது. அது மேல்மனத்தில் இல்லை. அதற்கு நாம் விழைய வேண்டியுள்ளது மற்றும் அதைக் கண்டுபிடித்து அடைய வேண்டியுள்ளது. அதை நம் தனிப்பட்ட ஜீவியத்தை உயர்த்துவதன் மூலம் அடையலாம். இவ்வளர்ச்சி பிரபஞ்சம், கடந்தது இவைகளை அடைவதற்கான பாதை ஆகும்.

நாம் ஏழு தத்துவங்களை எட்டாக பாவிக்கலாம். தெய்வீக வாழ்வின் வக்கரிப்பான நிலை மனித வாழ்வு என்று பார்த்தோம். சிருஷ்டி, பரிணாமம் இவைகளின் தலைகீழான நிலையே இவ்வக்கரிப்பு.

சத் — ஜடம்

சித் — வாழ்வு



ஆனந்தம் — சைத்தியம்

சத்திய ஜீவியம் — மனம்

சத் தன் நிலையிலிருந்து சித் மற்றும் ஆனந்தம் எனும் லீலை வழியாக கீழிறங்குகிறது. ஆக்கபூர்வமான இடைப்பொருளான சத்திய ஜீவியம் வழி பிரபஞ்ச ஜீவனுக்குள் அது இறங்குகிறது. நாம் ஜடத்திலிருந்து வளர்ச்சி பெறும் வாழ்வு, ஆத்மா, மனம் மற்றும் ஒளி பொருந்திய இடைப்பொருளான சத்திய ஜீவியம் வழி சத்தை நோக்கி உயருகிறோம். இரண்டு அரைக்கோளங்களும் ஓர் முடிச்சில் சந்திக்கின்றன. இதுவே மனமும் சத்திய ஜீவியமும் சேரும் இடம். இவைகளுக்கிடையே ஒரு திரை உள்ளது. உலகில் தெய்வீக வாழ்வை மேற்கொள்ள அத்திரை கிழிய வேண்டியது அவசியம். அத்திரை கிழிவதால் மேலுள்ள உயர்ந்த ஒளி கீழிறங்குவது நடைபெறுகிறது. அது மேலிருந்து தாழ்ந்த ஜீவனின் சுபாவத்திற்குள் இறங்குகிறது. தாழ்ந்த ஜீவன் வலிமையுடன் உயர்ந்து, உயர்நிலை ஜீவனின் தன்மையைப் பெறுகிறது. இதன் வழியாக மனம் தன் தெய்வீக ஒளியை காலத்தைக் கடந்த சத்திய ஜீவியத்தில் திரும்பப் பெற முடியும். ஆத்மா, அனைத்தும் பேரின்பமான ஆனந்தத்தில் தன்னை பிரம்மமாக அறிய முடியும். வாழ்வு தன் தெய்வத் திறனைத் திரும்பப் பெற முடியும். இத்திறன் சர்வ வல்லமையுள்ள சித் சக்தியின் லீலையுள் உள்ளது. சத்தின் ரூபமான ஜடம் அதன் உரிமையான தெய்வத்துவத்தை அடைய முடியும். மனிதன் தற்போது பரிணாமத்தின் கிரீடமாகவும் அதன் தலைவனாகவும் உள்ளான். பரிணாமத்தின் இலட்சியம் ஒரு இலக்கில்லாத சுழல் அல்ல. அது சுழலிலிருந்து தனித்த ஜீவாத்மா விடுதலை பெறுவதல்ல. இப்படைப்பு ஒரு அனந்தமான ஆற்றலைக் கொண்டது. ஆன்மாவிற்கும் ஜடத்திற்குமிடையே இங்கு அவன் மட்டுமே நிற்கிறான். அவற்றிற்கிடையே மத்தியஸ்தம் செய்ய அவனுக்கு மட்டுமே திறனுண்டு. அது வாழ்வின் மயக்கத்திலிருந்து பெறும் முடிவான விழிப்பல்ல. பிரபஞ்ச முயற்சியால் எழும் வெறுப்பு மற்றும் ஏமாற்றத்திலிருந்து விடுபடும் விழிப்பல்ல. அது வாழ்வை விலக்குவதல்ல.

அவனுடைய வாழ்வு அர்த்தமுடையது. அதன் அர்த்தம் ஒளி பொருந்தியதும் சக்தி வாய்ந்ததுமான உருமாற்றமாகும். அது படைப்பிலிருந்து இறைவன் வெளிவருவதாகும். இது ஒரு உன்னதமான உயர்த்தப்பட்ட குறிக்கோளாக இருக்க வேண்டும். இதுவே அந்த ஒப்புயர்வற்றதன் தனிச்சிறப்பு ஆகும்.

உருமாற்றம் அவசியமாக நிகழக்கூடிய வாய்ப்பாக உள்ள நிலையிலிருந்து சக்தி வாய்ந்த உள்ளாற்றலாக மாற்றப்பட வேண்டும். அம்மாற்றத்திற்கான மனோதத்துவ மற்றும் நடைமுறை வரையறைகள் அதற்கு உண்டு. முதலில் நாம் சச்சிதானந்தத்தின் இறங்குதலுக்கான அத்தியாவசியமான தத்துவங்களைக் கருத வேண்டும். பிரபஞ்ச வாழ்வில் அதன் இறங்குதலை ஏற்கனவே பார்த்தோம். இப்போது நாம் இங்கு அதன் ஒழுங்குமுறைக்கான பெரிய நிலையைக் கருத வேண்டும். சித் சக்திக்கான திறன் மற்றும் செயலின் தன்மையை நாம் கருத வேண்டும். இந்த சக்தி நாம் இப்போது உள்ள சூழ்நிலையை ஆட்சி செய்கிறது. நாம் ஏற்கனவே ஆய்வு செய்த ஏழு அல்லது எட்டு தத்துவங்கள் எல்லா பிரபஞ்ச படைப்பிற்கும் அத்தியாவசியமாகிறது. அவைகள் நம்முள் வெளிப்பட்டும், இன்னும் வெளிப்படாமலும் உள்ளன. நாம் இன்னும் பரிணாமத்திற்கான வயது வந்தவர்களாக மாறவே இல்லை. ஒரு வயதுக் குழந்தையாகவே உள்ளோம். உயர்ந்த திரித்துவம் எல்லா வாழ்வுக்கும் ஆதாரமாகவும், அடிப்படை-யாகவும் உள்ளது. வாழ்வின் லீலைக்கு அது அடிப்படையாக உள்ளது. எல்லா பிரபஞ்சமும் அதன் சத்தியத்தின் வெளிப்பாடு மற்றும் செயலாகும். எந்த பிரபஞ்சமும் ஒரு ஜீவனின் வெளித் தோற்றமாக மட்டும் இருக்க முடியாது. வெறுமையான சூன்யத்திலிருந்து அது திடீரென்று தோன்றியிருக்க முடியாது. உயிரற்ற ஒரு வெறுமைக்கு எதிராக அது நின்றுகொண்டிருக்க முடியாது. அது எல்லா தோற்றத்திற்கும் பின்னால் உள்ள அனந்தமான வாழ்வுக்குள் வதியும் ஜீவனின் உருவமாக இருக்க வேண்டும். அல்லது அதுவே பரம்பொருளாக இருக்க வேண்டும். அப்போது நாம் அது ஒரே சமயத்தில்



இரண்டுமாகவும் உள்ள உண்மையைப் பார்க்கலாம். பிரபஞ்ச ஜீவனோடு நாம் நம்மை ஒருங்கிணைத்துக் கொண்டால் நம்மால் அதைக் காண முடியும். அது பரம்பொருள் தன்னைத் தோற்றமாக வெளிப்படுத்துவது ஆகும். அது தன்னை எல்லையற்ற தொடரின் லயமாக, தோற்றமாக வெளிப்படுத்து-கிறது. அது தன் கருத்தால் தன்னை விரிவுபடுத்துவதன் மூலம் அதைச் செய்கிறது. இந்த விரிவு காலமும் இடமுமாகிறது. பிரபஞ்சத்தின் எந்தச் செயலும் சத் சக்தியின் லீலையின்றி செயல்பட முடியாது. அது இத்தோற்றங்களையும் சலனங்-களையும் உருவாக்கி ஒழுங்குபடுத்துகிறது. அச்சக்தி அனந்த ஜீவியத்தின் செயல் ஆகும். ஏனெனில் அது இயற்கையில் பிரபஞ்சத்தின் உறுதியாகும். அது எல்லா தொடர்புகளையும் நிர்ணயிக்கிறது. அது தனக்கேயுரிய விழிப்புணர்வுக்கான முறையில் அவைகளைக் கைப்பற்றுகிறது. அதன் பின்னால் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு ஜீவியம் இல்லாமல் அது செயல்பட முடியாது. இந்த ஜீவியம் பிரபஞ்ச விழிப்புணர்வுக்-கான முறையின் பின் உள்ளது. ஜீவனின் தொடர்புகளை அது எழுப்புகிறது, நிலைக்க வைக்கிறது, பொருத்துகிறது. ஜீவனின் தொடர்புகள் உருவாக்கம் வளர்வதாகும். அல்லது அவை தானே அவ்வடிவங்களாக உருவெடுப்பது ஆகும். அதை நாம் பிரபஞ்சம் என்கிறோம்.

ஜீவியம் என்பது எல்லாம் அறிந்ததும் மற்றும் எல்லா வலிமையும் உள்ளதும் ஆகும். அது முழுவதுமாக ஒளி பொருந்திய நிலையில் தன்னைத்தான் பெற்றுள்ளது. இப்படிப் பெற்றுள்ள நிலை பேரின்பத்தை அதன் இயல்பான தன்மையாகக் கொண்டுள்ளது. அது வேறெதாகவும் இருக்க முடியாது. ஒரு பரந்த அகிலத்தின் சுய ஆனந்தம் பிரபஞ்ச வாழ்வுக்குக் காரணமாக இருக்க வேண்டும். இவ்வானந்தம் பிரபஞ்ச வாழ்வின் சாரமும், பொருளும் ஆகும். பண்டைய முனிவர்கள் அனைத்தையும் சூழ்ந்துள்ள இப்பேரின்பத்தைப் பற்றி கூறியுள்ளனர். அதை நம் தூய வான் வெளியாக அறிவித்தனர். அது இல்லையென்றால், யாராலும் சுவாசிக்க

முடியாது, யாராலும் வாழ முடியாது. இந்த சுய ஆனந்தம் ஆழ்மனமாகலாம். அது வெளிப்பார்வைக்கு மேல்மனத்தில் மறைந்துள்ளதாகத் தெரியலாம். நம் அடித்தளத்தில் அவை இருக்க வேண்டும். அனைத்து வாழ்வும் அந்தத் தேடுதலை நாடுவதாகவும் அதை அடைவதாகவும் இருக்க வேண்டும். பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டவை பல வழிகளில் தன்னைத் தேடிக் கண்டறியலாம். உறுதியிலும், திறனிலும் அல்லது ஒளியிலும், ஞானத்திலும் தன்னைக் கண்டறியலாம். அவன் ஜீவனிலும், பரந்த நிலையிலும் அல்லது அன்பிலும் சந்தோஷத்திலும் இருக்கலாம். அவன் தன்னை எப்படிக் கண்டுகொண்டாலும், அந்நிலையில் அவன் விழிப்புணர வேண்டும். மறைபொருளாக உள்ள பரவசத்தின் ஏதோ ஒன்றை அவன் விழிப்பால் அறிகிறான். ஜீவனின் சந்தோஷம் மற்றும் ஞானத்தின் ஆனந்த உணர்வை விழிப்பால் அறியலாம். அல்லது உறுதியும் திறனும் அவனை அடைதலால் எழும் பேருவகையை அறியும் விழிப்புணர்வு பெறலாம். அல்லது அன்பாலும், சந்தோஷத்தாலும் ஐக்கியமாகும் பரவச நிலையை அவன் விழிப்பால் அறியலாம். இவை பரந்து விரியும் வாழ்வின் உயர்ந்த நிலைகளாகும். அவை அதன் மறைந்துள்ள அடிப்படையின் சாரமாகும். இந்த பரந்து விரியும் வாழ்வு இன்னும் நாமறியாத பல உயர்வுகளைக் கொண்டது. எங்கெல்லாம் பிரபஞ்ச வாழ்வு வெளிப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த மூன்றும் அதன் பின் இருக்க வேண்டும். அவை அதனுள் உள்ளன.

சச்சிதானந்தத்திற்கு தான் ஜீவனாக பார்வைக்கு வெளிப்படும் அவசியம் இல்லை. அல்லது, அப்படி வெளிப்பட்டால், அது பிரபஞ்ச ஜீவனாகாது. சாதாரணமான வெறும் ஒரு எண்ணிக்கைகளின் அனந்தமாகும். அவை ஒரு நிலையான ஒழுங்கையோ தொடர்பையோ பெறாது. ஒழுங்கும் தொடர்பும் நான்காம் நிலையான சத்திய ஜீவியம் அவைகளுக்கு உள்ளிருந்து வளர்ச்சியுற்று வெளி வருவதால் ஏற்படும். சத்திய ஜீவியம் ஒரு தெய்வீக மறையியல் ஞானமாகும். ஒவ்வொரு



பிரபஞ்சத்திலும் ஞானம், உறுதிக்கான திறன் இருக்க வேண்டும். இத்திறன் தன் அனந்தமான ஆற்றல் வளத்தின் மூலம் தொடர்புகளின் நிர்ணயத்தை முடிவு செய்கிறது. அது விதையிலிருந்து அதன் வளர்ச்சிக்கான பரிணாமத்தை உருவாக்குகிறது. வலிமைமிக்க சீரான பிரபஞ்ச சட்டத்தை அமல் செய்கிறது. உலகங்களை மரணமிலா நிலை எய்திய ஞானி போலவும், அதை ஆளும் அரசன் போலவும் அது பார்வையிடுகிறது மற்றும் ஆள்கிறது. இத்திறன் சச்சிதானந்தம் தானே செயல்படுவதன்றி வேறில்லை. படைப்பில் உள்ளவை அனைத்தும் அதன் சுய இருப்பிலிருந்து எழுந்தவையே. அதனுள் இல்லாதது எதுவும் இங்கில்லை. எல்லா பிரபஞ்ச சட்டமும் வெளியிலிருந்து சிருஷ்டிக்குள் திணிக்கப்பட்டவை அல்ல. உள்ளிருந்து எழுந்தவையே. எல்லா வளர்ச்சியும் அதன் சுய வளர்ச்சியே. எல்லா விதையும் அதன் முடிவும் சத்தியத்தின் கருவே ஆகும். அனைத்தும் அக்கருவின் பரிணாமமே ஆகும். அப்பரிணாமம் அதன் உள்ளாற்றலால் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தக் காரணத்தால், எந்தச் சட்டமும் முழுமையானதல்ல. பரம்பொருள் மட்டுமே முழுமையானது. அனைத்தும் தனக்குள்ளே முடிவிலா உள்ளாற்றலைக் கொண்டுள்ளன. அவை நிர்ணயிக்கப்பட்ட உருவம் மற்றும் வழியைக் கடந்த நிலையிலுள்ளன. சுய கட்டுப்பாட்டுக்கான எண்ணத்தால் அவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவ்வெண்ணம் அதற்குள்ளே உள்ள அனந்தமான சுதந்திரத்திலிருந்து வெளிப்படுகிறது. வரம்பில்லாத பரம்பொருள் சுய கட்டுப்பாட்டிற்கான திறனை தனக்குள் இயல்பாகவே பெற்றுள்ளது. அனந்தம் பலவான அணுவாகத் தன்னைக் கருத முடியும். இல்லையென்றால் அது அனந்தமாக இருக்க முடியாது. பரம்பொருள் தன் சுய நிர்ணயத்தை மேற்கொள்ளும் வரம்பில்லாத ஆற்றல் கொண்டது. அது ஞானம், திறன், உறுதி மற்றும் வெளிப்பாட்டில் உள்ளது. இல்லையென்றால் அது முழுமையான பரம்பொருளாக இருக்க முடியாது. இந்த சத்திய ஜீவியம், சத்தியம் அல்லது முழு எண்ணம் எனப்படும். அது எல்லா பிரபஞ்ச சக்தியிலும், வாழ்விலும் இயல்பாக உள்ளது.

தொடர்பையும், ஒழுங்குமுறையையும் நிர்ணயம் செய்வதும் அவற்றைத் தாங்கிப் பிடிப்பதும் அவசியமாகிறது. அதன் வெளிப்பாட்டிற்கான சிறந்த முறையை நிலைநிறுத்துகிறது. வேத ரிஷிகள் தங்கள் மொழியில் சச்சிதானந்தத்தை விவரித்தார்கள். ஜீவன், ஜீவியம், ஆனந்தம் என்ற மூன்று உயர்ந்த, பெயரற்றதன் மறைபெயர்கள் அவை. அது போல், சத்திய ஜீவியம் என்பது நான்காவது பெயர். அது தன் இறங்கும் நிலையில் நான்காவதாக உள்ளது. நம் உயரும் நிலையில் அது நான்காவதாக உள்ளது.

மனம், வாழ்வு, ஜடம் என்பவை தாழ்நிலையிலுள்ள முக்கூறுகளாகும். எல்லா பிரபஞ்ச ஜீவனுக்கும் அவைகள் இன்றியமையாதவையாகும். இவை புவியில் நமக்குத் தெரிந்த ரூபங்களாக அல்லது நிலைகளாக இருக்க வேண்டும் எனும் அவசியமில்லை. ஆனால் எவ்வளவு ஒளி பொருந்திய, அல்லது சக்தி வாய்ந்த அல்லது சூட்சுமமானதாக இருந்தாலும், அவைகளின் ஏதோ ஒருவிதமான செயல்பாட்டிற்கு இவை இன்றியமையாதவையாகும். மனம் அளவிடுவதும், வரையறை செய்வதுமான திறனுடைய சத்திய ஜீவியத்தின் ஒரு கருவியாகும். அது குறிப்பிட்ட ஒரு மையத்தை ஏற்படுத்தி அதன் வழியாகப் பார்க்கிறது. பிரபஞ்சத்தின் சலனத்தையும், மற்றதுடன் அதன் செயல்பாட்டையும் பார்வையிடுகிறது. ஒரு குறிப்பிட்ட உலகத்தில் அல்லது நிலையில் மனம் வரையறைக்குட்பட அவசியமில்லை. மனம் ஒரு கீழ்நிலை-யிலான திறன். ஆனால், அதை உபயோகப்படுத்துபவர் மற்ற காட்சிக்கோணங்களிலிருந்து விஷயங்களைப் பார்க்க முடியும். அல்லது எல்லாவற்றுக்குமான உண்மையான மையத்திலிருந்து அவரால் பார்க்க முடியும். பரந்த பிரபஞ்சத்தில் தான் முழுவது-மாக வியாபித்த நிலையிலிருந்து பார்க்க முடியும். ஆனாலும் அவர் தன்னை தன் சொந்த இயல்பான காட்சிக்கோணத்தில் நிலைநிறுத்த வேண்டும். இது தெய்வீக நிலைக்குரிய செயல்பாட்டின் சில குறிக்கோள்களுக்கு அவசியம். ஒருவேளை பிரபஞ்சத்தில் மட்டும் சுயமாக பரவி வியாபித்திருக்கும்



நிலையானால், அல்லது செயல் வரையறை இல்லாத அனந்தமான மையங்கள் மட்டும் ஏற்பட்டிருந்தால், அப்போது பிரபஞ்சம் என்ற ஒன்றிருக்காது. அது ஜீவன் அனந்த நிலைகளில் தனக்குள்ளே ஆழ்ந்து ஈடுபட்டிருப்பதாகும். ஒரு சிருஷ்டிகர்த்தா அல்லது கவிஞன் சுதந்திரமாக தன் உள்ளார்ந்த சிந்தனையில் ஈடுபடுவதுபோன்ற நிலை அது. படைப்பை செயலாக்கும்முன் அது தனக்குள் ஆழ்ந்த சிந்தனையில் லயிக்கலாம். இந்த நிலை அனந்தமான சிருஷ்டியில் எங்காவது இருக்கலாம். ஆனால் நாம் பிரபஞ்சம் என்று அறிவது அது இல்லை. முறை என்று ஒன்று இருந்தால் அது வரையறையற்ற, கட்டுப்படுத்தாத ஒழுங்கு முறையாக இருக்க வேண்டும். அம்முறை சத்திய ஜீவியத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். சத்திய ஜீவியம் நிலையான வளர்ச்சியைச் செயல்படுத்தும் கடமையைக் கொண்டது. அதைத் தொடர்ந்து, அளவீடு செய்வதும், மற்றவைகளுடன் தொடர்புக்கான செயலிலும் அது ஈடுபடுகிறது. அளவிடும் செயலுக்கு மனம் அவசியமாகிறது. மனம் சத்திய ஜீவியத்தின் கீழ் நிலை செயல்-பாட்டிற்குரியதாகும். சத்திய ஜீவியத்தின் கீழ் செயலாற்றும் அளவிற்கு மனம் தன்னையறிந்தால் போதும். அது அகந்தையின் அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்தும் அவசியமில்லை. இது புவியுலகத்தின் இயற்கை சக்தியில் அதிகமாக செயல்-படுவதைக் காணலாம்.

மனம் என்று ஒன்று இருந்தால், வாழ்வும் தோற்றமும் அதைத் தொடர்ந்து வரும். சக்தி மற்றும் செயலை நிர்ணயம் செய்வது வாழ்வாகும். அது தொடர்புகளை நிர்ணயிப்பதும், சக்திப் பரிமாற்றமும் ஆகும். செயல் பரிமாற்றம் ஜீவியத்தின் பல நிலையான மையங்களிலிருந்து எழுகிறது. அவை காலம் மற்றும் இடத்தில் நிலைப்படும் அவசியமில்லை. அவை ஜீவன்களின் உறுதியான உடனிருத்தல் அல்லது பிரம்மத்தின் ஆத்ம ரூபங்களில் நிலைப்பட்டுள்ளன. அவை பிரபஞ்ச ஒற்றுமைக்கு ஆதரவு தருகின்றன. அவ்வாழ்வு நாமறிந்த வாழ்விலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கலாம்.

அடிப்படையில் அதே தத்துவம் செயல்படுவதாகும். நாம் இங்கு பார்க்கும் அத்தத்துவம் உயிரின் வீரியமாக கருதப்படுகிறது. பண்டைய இந்தியச் சிந்தனையாளர்கள் அதை வாயு அல்லது பிராணன் என்றழைத்தனர். அது வாழ்விற்கான மூலப்பொருள், பிரபஞ்சத்தில் உறையும் திடமான உறுதி மற்றும் சக்தி ஆகும். அது நிர்ணயம் செய்யப்பட்ட தோற்றமாக உருவாகிறது. அது செயலாக மற்றும் ஜீவனின் தன்னையுணர்ந்த உள்ளுறைத் திறனாக உருவாகிறது. பொருள் என்பதும் நாம் உணரும் ஜட உடலைவிட வேறுபட்டிருக்கலாம். அது அதிகமான சூட்சுமம் வாய்ந்ததும், குறைந்த இறுக்கமான கட்டுப்படுத்துதலும் உடையது. அதன் சுய பிரிவினைக்கான சட்டம் மற்றும் தாங்கும் ஆற்றல் குறைந்த கட்டுப்படுத்துதலை உடையது. உடல் அல்லது உருவம் ஒரு கருவியாக இருக்க வேண்டும். அது ஒரு சிறையல்ல. இருந்தாலும் சில நிர்ணயம், ரூபம் மற்றும் பொருள் அவசியம். இது பிரபஞ்ச செயல் பரிமாற்றத்திற்கு அவசியம். அது மனதிற்கான ஒரு உடலாக இருக்கலாம். அல்லது அதிகமாக ஒளிமயமானதும் சூட்சுமமானதுமாக இருக்கலாம். அதிக வலிமை பொருந்திய, மனதைவிட சுதந்திரமாக செயல்படக் கூடியதாக இருக்கலாம்.

பிரபஞ்சம் என்றொன்றிருந்தால் அதில் ஒரு தத்துவம் மட்டுமே வெளிப்படையாகத் தெரியும். அது பொருட்களின் தனித்த ஒரு தத்துவமாகத் தெரியும். மற்றவை அதன் தோற்றமாகவும் முடிவாகவும் காணப்படும். பிரபஞ்ச வாழ்விற்கு அவை இன்றியமையாதவையாக இல்லாதது போல் தோன்றலாம். ஜீவனின் அப்படிப்பட்ட தோற்றம் ஒரு மாயையான முகமூடி. அதன் உண்மை தோற்றத்தின் பின் உள்ளது. எங்கு பிரபஞ்சத்தில் ஒரு தத்துவம் வெளிப்படுகிறதோ, அங்கு மற்றவையும் இருக்க வேண்டும். அவை அங்கு உயிர்ப்பற்று சாட்சியாக மட்டும் இல்லை. அது மறைமுகமான வேலையில் ஈடுபட்டுள்ளது. உலகம் என்று ஒன்று இருந்தால் அது ஏழு தத்துவங்களையும் உட்கொண்டிருக்கும். அது உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலைக்கான செயல்பாடாக இருக்கலாம். மற்ற



உலகத்தில் அவை ஒரே தத்துவத்தில் புதைந்து இருக்கலாம். அது அவ்வுலகத்தின் முதலான அல்லது அடிப்படையான பரிணாமத்திற்குரிய தத்துவமாகிறது. ஆனால், உள்ளே புதைந்திருப்பது பரிணாமத்தால் வெளிப்பட்டாக வேண்டும். ஒரு சக்திக்குள் அனைத்தும் புதைந்து அதனின்று ஒரு உலகம் வெளி வரலாம். ஜீவனின் எழு மடங்கு சக்தி பரிணாமத்தால் வெளி வருவது எந்த உலகிற்கும் முடிவாக இருக்க வேண்டும். அதன் முடிவு அந்த எழுமடங்கு சக்திக்கான மந்திரத்தை அறிவதாகும். ஆகவே பிரபஞ்ச உடல் பரிணாமத்தால், மறைந்துள்ள வாழ்வை வெளிப்படுத்த வேண்டும். மறைந்துள்ள மனத்தை பரிணாமத்தால் வெளிக்கொணர வேண்டும். மறைந்துள்ள சத்திய ஜீவியத்தை பரிணாமத்தால் அது வெளிப்படுத்த வேண்டும். சிறப்பான, மூவகைத் தத்துவங்கள் ஒருங்கிணைந்த சச்சிதானந்தத்தை, ஒளிந்துள்ள ஆத்மாவிலிருந்து வெளிப்படச் செய்ய வேண்டும். இவ்வெளிப்பாடு நாம் வாழும் இவ்வுலகில் நடக்குமா என்பது கேள்வி. மனிதப் படைப்பில் இது நடக்குமா? இது இந்த ஜட உலகில் அல்லது வேறெங்காவது சாத்தியமா? தற்போதைய பரிணாமச் சக்கரத்தில் இது நடைபெறுமா? வேறு எந்த பெரிய காலச் சக்கரத்தின் சுழலிலாவது இது ஏற்படுமா? காலம் ஆன்மா வெளிப்படும் கருவியாகும். பண்டைய முனிவர்கள் மனிதவர்க்கத்தின் இந்த சாத்தியக்கூற்றை நம்பினர். அதை அவர்கள் மனிதனுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட முடிவாகக் கருதினர். நவீன அறிஞர்கள் இதை ஒரு எண்ணமாகக்கூட அறியவில்லை. அப்படியே அறிந்தாலும், அதை மறுத்தனர், சந்தேகித்தனர். சத்திய ஜீவனை அவர்கள் திருஷ்டியாகக் காணலாம். ஆனால், அது மனதுக்கோ அல்லது பிராணனுக்கோ உரிய ஓர் வடிவமாக இருக்கும். அதைத் தாண்டிய நிலையில் எந்த வெளிப்பாட்டையும் அவர்களால் ஏற்க முடியாது. அதைக் கடந்த எந்த தத்துவத்தையும் அவர்களால் எண்ண முடியாது. இதுவரை இவையே நம் எல்லையாகவும், பரிணாமத்திற்கான சுழற்சியாகவும் இருந்தன. படிப்படியாக வளர்ச்சி பெறும் இவ்வுலகில், இந்த மனித ஜீவனுக்குள் தெய்வக்கனலின் பொறி உண்டு.

உண்மையான ஞானத்தைப் பெறுவது அவனுடைய உயர்ந்த ஆர்வமாக இருக்கலாம். ஞானம் ஆர்வத்தை மறுப்பதல்ல. அது ஆர்வம் தன்னை வரையிட்டுக் கொள்வதும் அல்ல. அது ஆர்வம் தன்னை கட்டுப்படுத்துவதும் அல்ல. இவைகள் சாத்தியமானதைக் குறுக்குவதாகும். இவை நம் பயிற்சிக்காக இடையில் ஏற்பட்டவையாகும். ஆன்மீக விஷயங்களுக்கான ஒரு ஒழுங்கு முறை உள்ளது. அதில், எவ்வளவு உயர்வாக நாம் நம் எண்ணத்தை செலுத்துகிறோமோ அவ்வளவு உயர்வான சத்தியம் புலப்படும். அந்த சத்தியம் நம்முள் இறங்க விழைகிறது. அது ஏற்கனவே நம்முள் புதைந்து உள்ளது. திரையின்பின் மறைந்துள்ள அது வெளிவர குரலெழுப்புகிறது. அத்திரை அதை சிருஷ்டிக்குள் ஒளித்து வைக்கிறது.

## ஜீவிய மணி

எது நல்லது, எது கெட்டது என நாம் நமக்கெனச் சில விதிகளை வைத்திருக்கிறோம். நாம் அன்பர். ஒருவர் நம்மை எதிர்த்தால், அவர் தவறான மனிதரானால், நாம் செய்வது சரியானால், அவர் நஷ்டம் அடைவது உண்டு. அழிவதும் உண்டு. அது நமக்குத் திருப்தி அளிக்கிறது. நாம் சரியானவர், அடுத்தவர் தவறானவர், தவறானவர் தண்டிக்கப்பட்டார் என நாம் நினைக்கிறோம். இது நம் சட்டம். அன்னை சட்டம் அன்று. எவரும் அழிவதற்கு அன்னை உடன்பட மாட்டார். ஒருவர் தான் அழியும்படி நடந்து அழிவது வேறு. அன்னை அதைத் தடை செய்வதில்லை. நமக்கு அன்னை சட்டம் புரியாவிட்டால், நம் சட்டத்தை நம்பி, அன்னை அவரைத் தண்டிப்பார் என நினைக்கிறோம். இந்த எண்ணம் சரியில்லை. இந்நினைவு எப்படியாவது அடுத்தவரை நம் பிடியுள் கொண்டுவர முயலும் எண்ணம்.





## Page 170: A door is cut in the mud wall of self
## பிரம்மத்தின் மண் சுவற்றில் பொருத்திய வாயில்

- ✡ தாழ்ந்த கூரைகளில் தலை வணங்கும் சிரம்
- ✡ பூரித்து மலரும் புண்ணிய தேவதைகள் நடக்கும்
- ✡ அந்தரங்க காராக்கிரஹத்தில் கனவில் வாழும்
- ✡ பரிதாபம் பரிமளிக்கும், நெருப்பாகப் பறக்கும் தியாகம்
- ✡ அனுதாபமும், அன்பொழுகும் இதமான இங்கிதமும்
- ✡ இதயக் கோவிலினின்று எழும் சொர்க்க லோக ஜோதிகள்
- ✡ ஆழ்ந்த மௌனம் சாதிக்கும் அற்புதச் செயல்
- ✡ உலகின் அனுபவம் ஆனந்தமாய் மாறும்
- ✡ தீண்டாத இடைவெளி, புதிரில் உறையும்
- ✡ காலத்தின் கதி அமைதியாக்கும், இறைவன் இதயத்துள் உறங்குகிறான்
- ✡ தாளிட்ட நெஞ்சம், அதன் ஆழத்தின் ஆனந்தம்
- ✡ மரணமெனும் புறத்தின் பின் நின்று அசைய மறுக்கும்
- ✡ பிரம்மத்தின் ஜீவன் உள்ளே உருவாகிறது
- ✡ அது தெய்வீக ஆனந்தத்தின் திருவுருவம்
- ✡ அது மோட்ச லோகம் இங்கு ஆள்வதாகும்
- ✡ நம்பிக்கையற்ற அறியாமை மனம்
- ✡ பெருவிடுதலை தரும் தீர்க்க தரிசனம்
- ✡ லேசாக எழும் கரங்களை உயர்த்தும் மன உறுதி
- ✡ நம் பகுதிகள் நாடும் அதன் ஆசையின் பிரம்மம்

✡ எண்ணங்கள் சூழும் நிலையான ஜோதி

✡ எல்லாம் வல்ல சக்தி எழுப்பும் நம் வலிமை

✡ மறைந்துள்ள தெய்வீக ஆனந்தம் சிருஷ்டிக்கும் நம் உலகம்

✡ அமர வாழ்வின் அழகு நாடும் சிறப்பான ரூபம்

✡ ஜீவனின் தூசி சிருஷ்டித்த நம் உலகம்

✡ வலைவீசும் ரூபங்களில் விரும்பி விழும் நம் நெஞ்சம்

✡ குருட்டுப் புலன் நாடும் பேரானந்தப் பெருவெள்ளம்

✡ சத்தியத்தைச் சிலுவையிலறையும் நம் தவறு

✡ தெய்வீக உடல் இங்கு பிறக்கும் கட்டாயம்

✡ மனிதப் பிறவியில் மறைந்துள்ள நிர்ப்பந்தம்

✡ தொட்டு அணைக்கும் உயிருள்ள உடல்

✡ ஆதிகால அறியாமையைக் காப்பாற்றும் ஞானம்

✡ இருண்ட பிரபஞ்சத்தைக் காப்பாற்றும் ஜோதி

## ஜீவிய மணி

கெட்டவர்களின் கெட்ட குணத்தை விலக்கி அவரிடம் பிரியமாக இருப்பதும், நல்லவரிடம் அவர் நல்ல குணத்தை விலக்கி அவரிடம் பிரியமாக இருப்பதும், மனிதனை, மனிதனாகக் கருதாமல் ஆன்மாவாகக் கருதுவதாகும். இதை நெருங்கிய உறவில் கடைப்பிடித்தால், ஆசை அன்பாகவும், அன்பு செலுத்துவது ஆன்மாவையும், ஆண்டவனையும் நெருங்குவதாகவும் ஆகும்.



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/17. நல்லவை தீவிர சிறப்பால் பிரம்மத்தில் முடியும்.**

- எது நல்லது, எது கெட்டது எனப் பாகுபாடில்லாதவர் உண்டு.
  நமக்கே பல சமயம் அது தெரியாது.
- அடம் செய்யும் குழந்தையை அடிப்பதா, அநியாயமாக நடக்கும் தம்பியை வெறுப்பதா, பொறுப்பற்ற கணவனை கடிந்து கொள்வதா, சமையல் செய்ய மறுக்கும் மனைவியை கெட்டவள் எனக் கூறுவதா எனத் தெரியாது.
- குழந்தை உருப்பட கண்டிப்பது அவசியம். கண்டிப்புப் பலன் தராவிட்டால் அடுத்தாற்போல் என்ன செய்வது, பலருக்குத் தெளிவு ஏற்படுவதில்லை.
- **கெட்டது எனத் தெரிந்தாலும் செய்ய மனம் ஆர்வமாக இருப்பது வழக்கம்.**
- எது நல்லது? எது தீவிர சிறப்பு? எப்படி அதை அடைவது என்பதெல்லாம் எவருக்கும் ஐயம் ஏற்படுவதில்லை.
- அடம் பிடித்தால் குழந்தை உதை வாங்கும், தம்பி அநியாயம் செய்தால் அண்ணன் தண்டனை தருவார், பொறுப்பற்ற கணவனை மனைவி வீட்டிற்குள் விட மாட்டாள், சமையல் செய்ய மறுக்கும் மனைவியை விரட்டி விடுவார்கள்.
- **அது பிரச்சனையற்ற உலகம். பிரச்சனை நல்லவருக்கே.**
  நியாயமான கண்டிப்பு, தண்டனையை அளிக்க மறுப்பவருக்கே பிரச்சனை.
- பொறுப்பு நல்லது, சம்பாதிப்பது நல்லது, பண்பாய்ப் பழகுவது நல்லது, உதவி செய்வது நல்லது, நல்லவர் எனப் பெயர் வாங்குவது நல்லது.
  **இதுபோன்ற நல்லது தீவிரமாவது என்றால் என்ன?**
  **தீவிரம் பிரம்மமாகுமா?**

  நெடுங்காலம் தவமிருந்து பெறும் பிரம்மம், நல்லது செய்தால் தீவிரத்தால் பெற முடியுமா?

- பரம்பரையான அரச குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்து நாட்டை ஆளும் பரம்பரை, மக்களாட்சி வந்து மாறியபொழுது எவரும் ஓட்டுப் பெற்று நாட்டை ஆளலாம் என மாறியது.
**பல ஆண்டு தவம் பலிக்கும் பலனை அன்னையை ஏற்பதால் பெறலாம் என்பது உண்மை.**
- 30 வால்யூம் என்சைக்ளோப்பீடியா — கலைக்களஞ்சியம் 30,000 ரூபாய்க்கு வாங்கினோம்.
**கம்ப்யூட்டரில் கலைக்களஞ்சியம் கணநேரத்தில் அப்பலனைத் தருகிறது.**
- உலகில் இம்மாறுதல்கள் என்றும் உண்டு. இன்று அதிகம். நாம் இப்பலனைப் பெற்றாலும், கவனிப்பதில்லை. கவனித்து புரிந்து ஆன்மீகப் பலனையடைய முனைவதில்லை.
- சிறு குடும்பம், மூன்று பெண்கள், தகப்பனார் ஆன்மீக உண்மையை நாடினார்.
பெரிய நகைக்கடை மாப்பிள்ளை ஒரு பெண்ணை மணந்து கொண்டார்.
அடுத்தவர் அயல் நாட்டிலிருப்பவர், விரும்பி அடுத்த பெண்ணை மணந்தார். மூன்றாம் பெண்ணுக்கும் அப்படியே முடிந்தது.
**வாழ்வு தர முடியாத பலனை மனம் உண்மையாக ஆன்மீகத்தை நாடியதால் ஒரு முறை பல முறையாகி பெரும்பலன் கிடைத்தது** - ஒரே மகன் இடறி விழுந்து எழுந்து பெரிய வருமானம் பெறுகிறான்.
- இவை வாழ்க்கைப் பலன்கள். பிரம்மம் யோகப் பலன்.
வாழ்வின் சட்டம் யோகத்திற்குப் பலிக்குமா?
**பூரண யோகத்தில் யோகமே வாழ்வு, வாழ்வே யோகம். மேலும் ஒன்று; நல்லது நமக்கு ஒத்து வராது.** ஒத்து வந்தால் உயராது. உயர்ந்தால் உச்சகட்டம் போகாது.
    கழுகு உயரே பறப்பதற்கு அளவுண்டு. தொடர்ந்து உயர முடியாது.
    நல்லது சிறப்படைய கடைசி கட்டத்திற்கு முன் கட்டம் வரை வரலாம். கடைசி கட்டம் போக முடியாது.



- பணம் படைத்த குடும்பத்தில் ஒரே பையன். துஷ்டமாகப் பேசுவான். படிப்பு வராது. பரீட்சை எழுதினால் பெயிலாவது வழக்கம். பலமுறையும் பெயிலாவான். தகப்பனார் செல்வாக்-கால் SSLC, Intermediate பாஸ் செய்தான். Honours சேர்ந்தான். முதலாண்டு ஆங்கிலப் பரிட்சை எழுதி **பாஸ் செய்தான்.**
''என் வாழ்நாளில் முதல் முறையாகப் பாஸ் செய்த பரீட்சையிது'' என்றான். வக்கீலானான். ஹைகோர்ட்டில் வேலை. கேஸ் வரவில்லை.
''முதல் மார்க்கு வாங்குவது என்பது எல்லார்க்குமில்லை. இப்பொழுது நான் ஏழாம் வகுப்புப் பரீட்சை எழுதினாலும் முதல் மார்க்கு கெட்டிக்காரப் பையனுக்கே போகும். எனக்கு வராது'' என்றான்.
**இந்த ஞானம் விவேகத்தின் உச்சக்கட்டம்.**
கடைசி கட்டம்வரை முயற்சியால் போகலாம்.
முதல்வனாக வர சொந்த புத்திசாலித்தனம் வேண்டும்.
நல்லது செய்யலாம். அதிகமாகவும் செய்யலாம்.
நல்லதை சிறப்பாகச் செய்ய முயன்றால் செய்யும் வேலை கெட்டு விடும்.
நல்லது சிறப்பாக நடக்க அனைத்து அம்சங்களும் நல்லதாக, சிறப்பாக இருக்க வேண்டும். அது நம் கையில் இல்லை. அதையும் கடந்து நம் மனத்தில் – உள்ளே, அக வாழ்வில் – அனைத்து அம்சமும் சிறப்பாக நல்லதாக இருக்க வேண்டும். தவ முயற்சி இது.
- செயலும் தவம், வாழ்வும் தவம், எவரும் தெய்வம், பெரியவர் தெய்வம், சிறியவர் தெய்வம், நல்லவர் தெய்வம், கெட்டவரும் தெய்வம். **நல்லதைச் சிறப்பாக்க முயன்றால்,**
    — தர்மபுத்திரரை சூது அழைக்கும்.
    — ஐந்து பேரை மணந்து கற்பின் சிகரத்திலிருந்தால், சபையில் துச்சாதனன் துகிலுரிப்பான்.
    — ரிஷி பத்தினியாக வாழ்ந்தால் திருமூர்த்திகட்குக் கெட்ட எண்ணம் தோன்றி, மனைவிமார் பொறாமைக்குக் கருவியாகி, நாரதர் கலக மனப்பான்மைக்குப் பலியாகி **தர்மம் சங்கடமாகி, தர்ம சங்கடம் உறுமும்.**

கற்பு அதையும் கடக்கும்.
அனுசுயா வென்றாள்.
பார்வதி லக்ஷ்மி பொறாமை, நாரதர் கலகம் தோற்றது.
— நல்லது இவ்வுலகிலோ, அடுத்த லோகத்திலோ சிறப்படைய பூலோகம் சுவர்க்கமாக வேண்டும்.

## ஜீவிய மணி

நிறையும் தன்மையில்லாத மனத்திற்கு நிறைவை அளிப்பவர் அன்னை. இந்நிறைவை எட்டுவதற்கு முன்னர், பல மனித நிலைகளை நாம் காண்கிறோம்: 'என் குடும்பம் தவறு எனினும் என்னால் விட்டுக் கொடுக்க முடியாது' எனும் மனோபாவம். சாதாரண வாழ்க்கையில் குடும்பத்தின் பெருமையைக் காப்பதைக் கடமை எனல் சரி. ஆனால் அன்னையின் வாழ்க்கையை ஏற்றபின், அன்னையின் சத்தியமே முதன்மையானது. குறையுள்ள குடும்பத்தின்மீது வைத்துள்ள பாசம் அக்குடும்பம் தரும் கொடுமையை விரும்பிப் பிடித்துக் கொள்வதாகும். ஆனால் இத்தகு குடும்பத்தை விலக்கி, அன்னையை ஏற்றால் உண்மையான பெருமை கிடைக்கும்.

குறையுள்ள குடும்பம் என்பது மட்டும் அன்றி, பெருமையுள்ள குடும்பம் எனினும், குடும்பப் பெருமையைவிட அன்னையே உயர்ந்தவர் என மனம் ஏற்க வேண்டும். அப்பொழுது, குடும்பத்தின் மூலம் அன்னை தருவதைவிட, நேராக அன்னை வழங்கும் அருள் மேலும் உயர்வாக இருக்கும். அடுத்து, அன்னை பொய்யின் வழியாகச் செயல்பட முடியாது. சத்தியத்தின் மூலம் மட்டுமே செயல்பட முடியும் என்பதை உணர வேண்டும். அன்னையிடம் வந்த நல்ல எண்ணமுள்ளவர்க்குத் தீமை ஒரு பொழுதும் நிகழவே நிகழாது. தன் குறையை அறிந்து, பிறர் நன்மையை விழையும் நல்ல உள்ளம் உடையவர்க்கு, அவர் நினைத்த நல்லன எல்லாம் நடக்கும். முடிவில்லாத நல்ல மனத்திற்கு முடிவில்லாத நல்லது நடப்பதே முடிவு ஆகும்.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 110. எதிரி தேடி வந்து உதவி கேட்பது.

- மனிதன் மற்றவனை அந்தஸ்து மூலம் அறிகிறான்.
- ஒருவனை உதவி கேட்டால் தன்னை உயர்ந்தவனாக நினைக்கிறான்.
- அவன் செய்த உதவியைப் போல் மூன்று மடங்கு உதவி வலிய செய்தாலும் அது மனத்தில் படாது.
- **செய்யும் உதவியால் அந்தஸ்து உயராது.**
- அந்தஸ்தில்லாதவன் உதவி அலட்சியப்படுத்தப்படும்.
- இல்லாத அந்தஸ்தை கிராக்கி ஓரளவு தரும்.
- அந்தஸ்தில்லாமல், கிராக்கி செய்யாதவனை அதிகாரம் செய்து உதவி கேட்பார்கள்.
- அன்பருக்கு இவைச் சமர்ப்பணத்தை உணர்த்தும்.
- வலியப் போய் உதவி செய்வது தவறு.
- மட்டமானவர்க்கு உதவி செய்தால் நம்மை மட்டமாக நினைப்பார்கள்.
- ஒரு வேலையில் பல அம்சங்களிருக்கும்.
- **பலனுக்கு (fees) வேலை செய்தால் மரியாதை இருக்கும்.**
- பண்பற்ற ஊரில் தொடர்பில்லாதது நல்லது.
- கொடுக்கும் உதவியின் தரம் தெரியாது. கேவலமாக நினைப்பார்கள்.
- மக்களைப் புரியாதவர் எதைச் செய்வதும் தவறாக முடியும்.
- செய்வது நல்ல காரியம் என நினைப்பது உலகம் தெரியாதது என்றாகும்.
- அன்பர் பிறருக்கு உதவி எனச் செய்து அவமானப்படாமலிருக்க முடியாது.

- **அன்பரை அறிவதால் அவருக்கு நல்லது நடக்கும்.**
- நான் நல்லது செய்தேன் என அறிய விரும்புவது ''நான்'' செய்வது.
- மனிதன் யார் என்பதைவிட, என்ன காரியம் என்பதைவிட, நான் யார் என்பது முக்கியம்.
- இவற்றைக் கடந்து சமர்ப்பணம் செயல்படுவது அற்புதம்.
- சமர்ப்பணம் அற்புதமானாலும் மனித சுபாவம் வெளிப்படும்.
- வெளிப்படும் சுபாவம் அதற்குரிய பலனைப் பெறும்.
- கொடுப்பதால் நல்ல பெயர் வாராது.
- நல்ல உள்ளம் நல்ல பெயரைத் தராது.
- காரியத்தை அறிந்து, மனிதனை அறிந்து, செய்வது பலன் தரும்.
- நல்ல பெயரை நாடினால் கெட்ட பெயர் வரும்.
- நல்ல பெயரை நாடாவிட்டால் எவரும் கண்டுகொள்ள-மாட்டார்.
- நல்ல பெயர் நல்லவனுக்கில்லை, நல்லதிலில்லை, உலகம் அறியும் அபத்தம் நல்ல பெயர் பெறுவதுண்டு.
- **எதிரி தேடி வந்தால் பூரண யோகம் பலிக்கும்.**
- எதிரி தேடி வரும் முறையையும் பொறுத்தது.
- எதிரி திரும்புவது வாழ்வு மாறுவது.

### ஜீவிய மணி

எப்பொழுதும் சோகமானவர் பிறர் சோகமாக இருப்பார்கள் என நினைக்கிறார். எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவர், பிறர் தம்மைப் போல் சந்தோஷமாக இருப்பார்கள் என நினைக்கிறார். நம்மைப் பொறுத்தவரை, உலகம் நம்மைப் போல் இருப்பதாக நினைக்கின்றோம்.



## அஜெண்டா

### எளிய மனம் கூறும் இனிய கட்டுக் கதைகள்

Volume 8, page 120

- மனிதன் தன்னை அறிவதாக நினைத்துப் பெருமைப்-படுவான்.
- **தன்னையறியும் திறன் இதுவரை மனிதனில் பிறக்கவில்லை.**
- சிறியதிலிருந்து பெரியதுவரை மனித இலட்சியங்கள் ஏராளம்.
- கடமையை அறிந்த சிறிய மனிதன் ஆர்வமாகத் தன் வாழ்வைக் குடும்பத்திற்கு தியாகம் செய்கிறான்.
- உலகம் அவனைப் போற்றும்.
- அவன் உள்ளம் நிறைந்து பெருமிதமடையும்.
- இவன் உணர்ச்சியால் வாழ்பவன்.
- அத்தை மகளை மணக்க மறுத்த கல்லூரி ஆசிரியர் திருமணமான அன்று அவளுடன் வாழப்போவதில்லை என்று அறிவித்து 50-ஆம் வயதில் தனியாக இறந்தார்.
- **அவர் ஓர் இலட்சியத்தை நிறைவேற்றியதாக நினைத்தார்.**
- மனித இலட்சியங்களின் பல கூறுகளில் இதுவும் ஒன்று.
- பகவானை ஏற்று, ஆன்மா மலர்ந்து 96-ஆம் வயதில் இறப்பவர் பெரும் இலட்சியத்தை சாதித்தவராகக் கருதி மகிழ்கிறார்.
- மேற்கூறிய எவரும் தம்மை அறிந்தவரில்லை.
- **தன்னை அறிய முடியாத மனிதனின் கற்பனை ஆயிரம் கதைகளாக வெளிவரும்.**
- எது சரி? எது நல்லது? எது பெரியது? எது இலட்சியம் என அறிய ஒருவனுக்கு 'மனிதன்' என்றால் என்ன என்று தெரிய வேண்டும்.

- போக்கிரிக்கு நிச்சயமானவள் நாடு விட்டு நாடு வந்து திருமணம் செய்து சந்தோஷமாக வாழும் பொழுது போக்கிரி தொடர்ந்து அவள் வாழ்வை அழிக்கிறான்.
- அவள் சரியா? அவன் சரியா? எது சரி?
- காலம் மாறும்பொழுது கருத்து மாறுகிறது.
- காலத்திற்குரிய எந்தக் கருத்தும் நிலையானதல்ல.
- சமூகம் காலத்துள் மாறுகிறது.
- **அன்பர்கட்குக் 'காலமே' மாறுகிறது.**
- காலத்தைக் கடந்ததை அன்பர் அறிவதில்லை.
- எதிரிமீது எழும் கோபம் அவனை வலுப்படுத்தும் என நாம் அறிவதில்லை.
- எதிரி மறந்து போனால் அவன் எதிர்ப்பால் அவன் அழிவான் எனவும் அறிவதில்லை.
- அறிவு என்றால் எதை அறிவது அறிவு?
- **ஒரு சில நிமிஷம் 'கால'த்தை விட்டு வெளி வந்து 'கண்'ணால் பார்த்தால் 'அறிவு' தெரியும். அந்நேரம் அன்பர் காணும் அற்புதம் நாம் எதை அறிவு என நினைக்கிறோம் என்பதும் தெரியும்.**
- அன்பர் அன்பரானால் அவர் இதயம் சொர்க்கம்.
- அவரால் கதை பேச முடியாது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பகவான் உலகுக்குக் கொண்டு வந்த ஆத்ம ஞானப்படி, ஒருவருக்குப் பேரதிர்ஷ்டம் வரும்முன் பேரிடி விழும். பேரிடியைப் பேரிடியாக அறிவது மனித அறிவு. பேரிடியைப் பேரதிர்ஷ்டமாக அறிவது ஆத்ம ஞானம். அந்த ஆத்ம ஞானம் நம்மை ஏக்கத்திலிருந்து விடுதலை செய்யும். துரதிர்ஷ்டத்தைப் பேரதிர்ஷ்டமாக மாற்றும்.

*இதுபோன்று ஒருவர் கஷ்டப்படும் பொழுது பகவான் அவரைக் கண்டு அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லையே என ஏங்குவதாகக் கூறுகிறார்.*



# மனிதன் கண்ட நீதியும் தெய்வம் வழங்கும் நீதியும்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவு ஆற்றியவர்: திருமதி வசந்தா லக்ஷ்மி நாராயணன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: நவம்பர் 24, 2014

நீதி என்பது வாழ்விலும், இயற்கையிலுமில்லை. *இறைவனுக்கு நீதியில்லை, மனிதனுக்குரியது நீதி.* வாழ்வு வளம் பெற செயல்படுகிறது. வாழ்வு சக்தியில் செய்வதை இயற்கை சட்டத்தில் செய்கிறது. இறைவன் இரண்டையும் அனுமதிக்கிறான். இறைவன் தேடுவது நீதி, சட்டமில்லை, *பெருகி வரும் பேரானந்தம்.* இறைவனைப் பிரம்மம் எனவும் ஆண்டவன் எனவும் அறிவோம். நிரந்தரமான bliss ஆனந்தத்தில் திளைக்கும். இறைவன் ஆனந்தம் வளரும் ஆனந்தமாகி (static bliss changes into variable delight) அதை எல்லா நிலைகளிலும், எல்லா நேரத்திலும், எல்லா அம்சங்களிலும் — ஜீவன், ஜீவராசி, பொருட்கள், செயல்கள் — ஆனந்தமாக அனுபவிப்பது இறைவனின் இலட்சியம். அதற்காகப் பிரபஞ்சம், பூவுலகம் என மனம், வாழ்வு, ஜடமாக சிருஷ்டித்து, பெரும் ஆனந்தம் மேலும் பெருகும் ஆனந்தமாக அஞ்ஞானத்தை இறைவன் சிருஷ்டித்தான். சிருஷ்டி படிப்படியானது - சத், சித், ஆனந்தம், துரியா, மனம், வாழ்வு, ஜடம். பரிணாமத்தால் ஜடம் உயர்ந்து சத்தாவது ஆனந்தம். அவற்றுள் நிறைந்துள்ள அஞ்ஞானம் ஞானமாவது பெருகி வரும் பேரானந்தம். இறைவன் மனிதனைத் தன் பிரதிபிம்பமாக சிருஷ்டித்தான். *இறைவன் பெறும் ஆனந்தம் மனிதனுக்கும் உண்டு.*

மனிதன் வாழ்வில் உயர்ந்து முன்னேறுகிறான். குடும்பத்தைக் கட்டிக் காப்பாற்றுகிறான். முன்னேறும் முயற்சிகள் வெற்றி பெறுவதும், தோல்வியுறுவதுமாக மாறிமாறி வருகின்றன. பையனுக்குப் படிப்பு வரவில்லை. பங்காளி என் சொத்தை எடுத்துக் கொண்டான் என்பது போன்ற பிரச்சனைகள் எழுந்தபடியிருக்கின்றன. ஏன் என் பையனுக்குப் படிப்பு வரவில்லை, பங்காளி அநியாயம் செய்கிறான் என்று மனம்

குமுறும் பொழுது *எனக்கு நீதி வழங்க வேண்டும் என்று குரல் எழுகிறது*. பையன் வருஷா வருஷம் பாஸானால் 8-வது அல்லது **BA**-யுடன் முடிப்பான். தகப்பனார் பையன் படிப்பைக் கவனிக்க ஆரம்பித்தால் நாட்டிலுள்ள புது நிலையில் பையன் டாக்டராகி, அமெரிக்கா போகலாம் எனப் புரியும். புரிந்ததைச் செயல்படுத்துவது அளவு கடந்த முன்னேற்றம். மனிதனுக்கு அந்த வாய்ப்பை இறைவன் வாழ்வு மூலம் சொல்வதை மனிதன் பையனுக்குப் படிப்பு வரவில்லை என அறிகிறான். *மனம் அமைதியாகி சற்று சிந்தித்தால், சிந்தனை உணர்வானால், உணர்வு உள்ளுணர்வானால்*, சந்தர்ப்பம் ஆண்டவன் நீதியை விளக்கும் வகையில் செய்தி வரும். இவன் போன்ற பையன் பெற்றோர் முயற்சியால் முன்னுக்கு வந்து மேல்படிப்பு படித்த செய்தி காதில் விழும். காதில் விழுவது கருத்தை எட்டினால் படிப்பு என்ற கடமை மேல்படிப்பு என்ற வாய்ப்பாக மனதில் அன்று மாறி, நாளடைவில் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். பையன் அமெரிக்கப் பட்டம் பெற்றுத் திரும்பியபின் ''படிப்பு வரவில்லை என்று கஷ்டப்பட்ட பொழுது காதில் விழுந்த செய்தி என் பையனின் வாழ்வை அடியோடு மாற்றி விட்டது'' என நினைவு வரும். மனிதன் தேடும் நீதி அன்றைய சௌகரியம். ஆண்டவன் நீதி அடுத்த கட்டத்தில் இன்று கற்பனை செய்ய முடியாத வசதியைப் பெறச் செய்யும் வழி எனப் புரியும். சட்டம் ஒன்றே. வாழ்வில் பிரச்சனைகளே-யில்லை. வாய்ப்புகள் மட்டும் உள்ளன. சிறிய வாய்ப்புகள் சிறு பிரச்சனைகளாகவும், பெரும் வாய்ப்புகள் கடினமான சிக்கலான பிரச்சனைகளாகவும் வருகின்றன. *மனித முன்னேற்றம் மனித நோக்கத்தால் நிறைவேறுவது*. நோக்கம் இருப்பது போதும் எனில் அதுவே பலிக்கும். முடிந்தவரை முயல்வது சரி என்பது நோக்கமானால், சந்தர்ப்பம் இடம் தரும் அளவு முன்னேறலாம். *அகமும் புறமும் அவனுக்கே உரியது. ஆண்டவன் தருவதை நன்றிப் பெருக்கோடு நல்லுணர்வால் பெறுவது மனிதன் தெய்வமாகும் பாதை என அறியலாம்.*

32 ஏக்கர் சொத்தில் ⅓ பங்குள்ள பங்காளி 22 ஏக்கர் அவனுடையது என எடுத்துக் கொண்டான். *இது அநீதி இல்லையா? இதுவேதான் நியாயமா?* இது அநியாயம். குடும்பப் பஞ்சாயத்து, ஊர்ப் பஞ்சாயத்து, கோர்ட்டிற்குப் போய் அதிகமாய் அவன் பெற்றுக் கொண்ட நிலத்தை மீட்க எல்லா முயற்சியையும் எடுக்க வேண்டும். *ஆனால் அவன் செய்வது தவறு என மனம் நினைக்கக் கூடாது.* ஊர், உலக சட்டப்படி பங்காளி தவறு செய்கிறான். அதை அந்தச் சட்டப்படி மீண்டும் பெற உரிய முயற்சியை நேரத்தில், முறையாக எடுப்பது சரி. அவசியம். ஆனால் மனம் நம் முயற்சியே சரி, முடிவு என நம்புதல் ஆண்டவன் அளிக்கும் நீதிக்குச் சரியில்லை. ''ஆண்டவன் நியாயம் எது எனத் தெரியவில்லை. நான் என் கடமையைச் செய்கிறேன்'' என்று நம்பி செயல்பட்டவருக்கு 22 ஏக்கருமே சட்டப்படி, நியாயப்படி, ஊரும், உலகமும் ஏற்று, பங்காளியே முன்வந்து தரும் நிலை ஏற்பட்டுவிட்டது. எதிர்பார்த்தது எனக்குரியது மட்டும். என் நம்பிக்கை சட்டத்திலோ, ஊரிலோ, என் முயற்சியிலோ இல்லை. ஆண்டவன் நீதியிலிருந்தது. முடிவு வந்த பிறகும் என்ன நடந்தது, எப்படி நடந்தது, ஏன் நடந்தது, இது என்ன நியாயம் என எனக்குப் புரியவில்லை என அன்பர் கூறியது பல முறை நடந்தவை. இதுபோன்ற பல்வேறு விஷயங்களைக் கண்டு அதன் அம்சங்கள் - காலம், பங்கு, சட்டம், கொடுத்தவர், பெற்ற வழி, மனநிலை - எல்லாம் ஒவ்வொன்றாய்ப் புரிந்தபின் *எல்லா அம்சங்களின் முறைகளை முழுமையாகப் பின்பற்றினால் 3½ வருட கேஸ் 3 வாரத்தில் முடியும்.* இதற்கு மூல காரணம் வாழ்வில் உண்டு. அதன் பின்னர் நம் சுபாவத்தில் அக்காரணம் தெரியும். சுபாவத்தால் அக்காரணங்களைப் புரிந்து கொண்டால், புரிந்து கொண்டதை தத்துவார்த்தமாகத் தெளிவு பெற்றால் பிரச்சனை வராது. பிரச்சனை வாய்ப்பாகும். வாய்ப்பு பெரிய வாய்ப்பாகும். சொத்தில் எழும் வாய்ப்பு மாறி, உயர்ந்து பதவியாகும். **MLA** ஒருவர் எலக்ஷனுக்கு நின்றவர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சந்தர்ப்பவசத்தால் பங்காளியைச் சுபாவத்தில் புரிந்து கொண்ட அன்பருக்கு அந்த இடம் வரும். இதுபோல் **MLA** ஆனவர் 2 பீரியடிருந்து, அதன்பின் அவர் தம்பி மகன் 2 பீரியடிருந்தார். இவை தற்செயலாக நடந்தவையல்ல.

*திருவுள்ளத்தால் பூர்த்தி பெற்றது*. ஆந்திராவில் **MP** சீட் கிடைக்காதவர் ஒரிஸ்ஸாவில் சீட் கிடைத்து மத்திய மந்திரியானார். முதலில் சீட்டை மறுத்த தலைவர் அநீதி-யிழைக்கிறார் என்பது மனித நீதி. அவருடைய அநீதி மூலம் ஆண்டவன் *வழங்கும் தெய்வ நீதி பூர்த்தியாகிறது*. பெண் பெற்ற பெரிய பட்டம் அந்த நாளில் அவளுக்குத் திருமண வாய்ப்பைக் கொடுக்கிறது என்றால் அது உலகம் வழங்குவது. அது உயர்ந்ததற்கு அடிப்படை எனப் புரிந்தபின் மாநிலத்திலேயே முதன்மையான குடும்பங்களிலிருந்து பெரும் பட்டம் பெற்ற வரன்களை அனுப்புவது இறைவன்.

*அநீதியை 'உயர்ந்த தெய்வ நீதி'யாக*
*அறியும் உள்ளம் ஆண்டவன் உறையும் இடம்.*

உடல் நலம், பிரமோஷன், பண வருமானம், வீடு கட்டுவது, நட்பில் நாணயம், கொடுத்த கடன் வசூலாவது, ஆப்பரேஷன் தடம் மாறுவது, வேலை கிடைப்பது, தலைக்குமேல் வந்த பிரச்சனை, கணவன் கைவிட்ட மனைவி, கணவனை நிராகரித்த பெண்ணை நினைத்து ஏங்கும் புருஷன், தேர்தலில் தோல்வி, 10,000/- ரூபாய்க்கு வாங்கிய மனையை 3 லட்சத்-திற்கு விற்கப் போய் 6 இலட்சம் பெற்ற நிகழ்ச்சி போன்றவற்றை எடுத்து ஆராய்ந்தால் அநீதியின் நீதி விளங்கும்.

மனிதன் கண்ணுக்குத் தெரிந்ததை அனுபவிப்பதை மகத்தான வெற்றியாகக் கொண்டு அதை அதிகமாகப் பெற உயிரை விடுகிறான். அவன் வியாபாரியானால் மார்க்கெட் என்ன தர முன்வருகிறது எனக் கவனிக்க மாட்டான். கல்லூரி ஆசிரியரானால் கல்வித்துறை அவன் கண்ணுக்குத் தெரியாது, பிரமோஷன் தெரியும். பாடகரானால் அத்துறை அளிக்க முன்வருவதை அறிய முன்வருபவர்களில்லை. அந்த மாதம் எத்தனை கச்சேரி செய்யலாம் என்பதே நினைவு. வியாபாரிக்கு மார்க்கெட்டும், வேலை செய்பவர்கட்கு அவரவர் துறையும் அளிக்க முன்வருவதையறியாத மக்கள் ஆண்டவன் நீதியைப் பற்றி நினைப்பதில்லை. பாடகருக்குப் பாரத ரத்னம் காத்திருப்பது தெரியாது. கச்சேரி வசூல் மனதிலிருக்கும்.



நடிகருக்கு நாட்டுத் தலைமையின் குரல் கேட்காது. அடுத்த படம் முக்கியமாகும். அம்பானி, M.S. சுப்புலட்சுமி, சூரியன், ஸ்டீவ் ஜாப்ஸ், பில்கேட்ஸ், டெண்டுல்கர் பெற்றது அவரவர் துறை மூலம் பெற்றது. அதையும் கடந்தது ஆண்டவன் தரும் நீதி. அது வரும்பொழுது கடுமையான சூழலுடன் வரும். அது நமக்குப் புரியாது. அன்னையின் சைத்தியக் கல்வியிலுள்ள 10 சட்டங்களில் ஒன்று 'நேற்றைவிட இன்று சற்று முன்னேற வேண்டும்' என்பது. அந்த நோக்கம் உள்ளவர்க்கு ஆண்டவன் தரும் நீதி புரியும். அதை முன்கூட்டி அறிபவருக்கு முன்னேற்றம் எந்த வயதிலும் தொடரும்.

மனிதன் தேடுவது அவன் அறிவுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்டது. சிறியது. எந்த ஆபீசரும், குமாஸ்தாவும் அடுத்த பதவி வேண்டும் என்றே முயல்வாரே தவிர இலாக்கா தலைமைப் பதவி, மந்திரி பதவி, அகில இந்தியப் புகழ் வேண்டும் என நினைப்பதில்லை. நினைத்தால் அதைப் பேராசை என்போம். காண்டேகர் கதைகளை மராட்டியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் அங்கு வேலை செய்த குமாஸ்தா. இன்று ஞான பீடப் பரிசு பெற்றவர் நெடுநாள் அச்சாபீசில் கம்பாசிட்டராக இருந்தவர். 158 பள்ளிகள், கல்லூரிகளுக்கு முதலாளி 26 ஆண்டுகட்கு முன் ரைஸ் மில்லில் வேலை செய்தவர். *இவற்றை உலகம் அதிர்ஷ்டம் என்று அறியும். உழைப்பு என விவரிக்கும்.*

ஆண்டவன் இவர்கட்கு மட்டும் இந்த அதிர்ஷ்டத்தைத் தரவில்லை. அனைவருக்கும் ஆண்டவன் தருவது இதுவே. பெற்றவர் சிலர். அச்சிலரில் பெரும்பாலோர் புரியாமல், தலைவிதியேயென தாழ்ந்து பெற்று உயர்ந்தவர். ஒரு சிலரே வாய்ப்பை அறிந்து போற்றி ஏற்றவர். அனைவருக்கும் ஆண்டவன் கொடுத்தார் என்பது நம்ப முடியவில்லையெனில், *அமெரிக்காவைப் பார்த்தால் உடனே அதன் உண்மை புரியும்*. நம் நாட்டில் வாழ்வு தரும் வாய்ப்பைக் கோடியில் ஒருவர் பெற்றால், அமெரிக்காவில் அதே வாய்ப்பை அனைவரும் ஏற்பதால் அது கோடீஸ்வர நாடாக இருக்கிறது.

கார் வந்த புதிதில், சுமார் 100 ஆண்டுகள்வரை பணக்காரர்கள் மட்டும் கார் வைத்திருந்தனர். இன்று நிலைமை மாறியது. மனிதன் பிறந்த பொழுது அவன் விலங்கிலிருந்து பிறந்தான். விலங்கினம் முழுவதும் மனிதர்களாகவில்லை. சத்திய ஜீவன் பிறந்தால் அதே போல் மனித குலம் முழுவதும் மாறாது என்று 1920-இல் கூறிய பகவான் 1947-இல் *பரிணாமம் பரிணாம வளர்ச்சி பெறுகிறது என்றார்*. ரேடியோ, கார், போன் சிலருக்கு மட்டுமிருந்த காலம் மாறி அனைவருக்குமாகி விட்டது போல் சத்திய ஜீவியம் வரும்பொழுது ஒரு சிலருக்கு மட்டுமல்ல, அனைவருக்குமாகும் என்ற கருத்துப்படி பகவான் எழுதுகிறார்.

நாம் செயல்படுவதெல்லாம் நம் செயலல்ல. *அவை ஆண்டவன் செயல் என்பது கடவுளை நம்புபவர்கள் ஏற்கும் கருத்து*. அதை முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள், நாம் நம்புகிறோம். ஆனால் எப்படி என நாம் அறிவதில்லை. அதையே தத்துவ ரீதியாகக் கூறினால் ''நம் செயலனைத்தும் இயற்கையின் செயல் எனலாம்'' என்று கூறுகிறார்கள். ஆண்டவனைக் கடந்து இயற்கைக்கு வந்தது போல் இயற்கையை வாழ்வு என்பதால் **Life-Response** என்ற சட்டத்தை நம்மால் ஏற்க முடிகிறது. நான் ஒருவருடன் போனில் பேசினாலும், பஸ் ஏறி சென்னைக்குப் போனாலும் அவை என் செயலல்ல, அவை சமூகம் என்னில் செயல்படுவது என்பது எவருக்கும் தெளிவான செய்தி. பகவான் **Spirit** ஆத்மா என்பதன் பரம்பரை விளக்கத்தை மாற்றி, எங்கும் நிறை பரம்பொருள் எனக் கூறுகிறார். *நாம் நம்மையும், நாம் முனைந்து ஆசைப்பட்டு செய்யும் செயல்களையும் நம் செயலாகக் காண்கிறோம். அதன் விளைவு உலகப் போர், பொருளாதார நெருக்கடி, பூகம்பம், புயல், இந்திய ஏழ்மை*. பகவான் உலகப் போரை ஆண்டவன் செயல் என்றும், உலகம் முன்னேறத் தடையாக உள்ள மன நிலை-களையும், செயல்களையும், கட்டுப் பெட்டியான இருண்ட மனப்பான்மைகளையும் உடைத்தெறிய இறைவன் மேற்-கொண்டது என்கிறார். அதை 1900-க்குப்பின் உலகம் இன்றுவரை பார்க்கிறது. சோவியத் யூனியனிருந்தால் அதன் இரகசிய திட்டங்கள் காரணமாக **WWW** எழுந்திருக்க முடியாது.



**Web** எழுந்தபின் அத்தடைகள் நிலைக்கா. உலகில் ஆத்மா **(Spirit)** அக்ஷர பிரம்மத்தைக் கண்டது. *மனம் என்ற கருவி செயல்பட்டு எட்டிய உயர்வு அது*. அதற்கடுத்த நிலையில் ஜீவனுள்ள முழுபிரம்மத்தை மனம் காண முடியாது. அதற்குரிய கருவியாக சத்திய ஜீவியம் பிறக்க வேண்டும். அதை இந்தியா சாதிக்க தன் அரசுரிமை, செல்வம், சத்தியம், நேர்மை, மானம், மரியாதை ஆகியவற்றை இழந்து அடுத்த உயர்ந்த கட்டத்தில் பெற வேண்டும். அதற்கு முதற்படியாக இந்தியா சுதந்திரம் பெற வேண்டும். *பழைய பரம்பரையில் வந்த ஆயுதம் தாங்கிய போர் அந்த அளவில் தேவையில்லை. ஆனால் அம்முறையை இந்தியா பரிணாமச் சட்டமாக ஏற்க வேண்டும் என்பது* பகவான் கொள்கை. பாரதமாக அதை அறிந்தால், பசுமைப் புரட்சியில் வாழ்ந்த விவசாயி உலக உணவுப் பிரச்சனையைத் தீர்த்தது போல், உலகப் பிரச்சனைகளான — பொருளாதார நெருக்கடி, வேலையில்லா திண்டாட்டம், சூழல் பாதிப்பு, அணு ஆயுத சேகரிப்பு, ஏழ்மை — அனைத்தையும் க்ஷணத்தில் தீர்க்கலாம் என்பது பகவான் கொள்கையிலிருந்து நாம் புரிந்து கொள்வது. மனிதன் சந்திக்கும் பிரச்சனைகள் அவனுக்கு அநீதியாகும். அவை ஆண்டவன் வழங்கும் ''உயர்ந்த நீதி'' என நாம் உணர்வது அவசியம். பாகிஸ்தான் பிரிந்தது, நாட்டின் லஞ்ச ஊழல், இந்து-முஸ்லீம் பிரிவினை, பருவ மழை சரிவரப் பெய்யாதது, கல்லூரிகளில் மாணவர் கல்வித் தரம் படு மோசமானது ஒரு புறமிருந்தாலும், போக்குவரத்து, கோடிக்-கணக்கான செல்போன், விதவைக்கான பென்ஷன், மக்களுக்கு உடல்நல இன்சூரன்ஸ், கடைத்தெரு வியாபாரம் ஆயிரம் மடங்கு பெருகியது, ரேடியோ, **T.V**, சமூக முன்னேற்றமான இலக்கியம், பெண் சுதந்திரம், அளவில் பெருகும் கல்வி போன்றவையும் அவற்றிற்குச் சிகரமாக 1947-இல் 30-ஆக இருந்த ஆயுள் பலம் இன்று 60-தைக் கடந்ததும், *ஆண்டவன் நீதி தானே செயல்படுவதை அனைவரும் காண உதவுகிறது*. சுயநலம் பரநலமானால், லஞ்சம் நேர்மையானால், ஒரு இழை அடிப்படையில் மனம் இருளிலிருந்து ஒளிக்குத் தாவினால் இந்தியா உலகத் தலைமையை அரசியலிலும் ஆன்மீகத்திலும்

பெறும். **One Man's Perfection can still save the world.** ஒருவர் எய்திய ஆன்மீகச் சிறப்பு ஒரு நாட்டின் முழுச் செல்வ வளமாகும் என நாம் உணர்வதைக் காட்டும்.

கடன் பாரம் கடலென விரிந்து கண்ணில் விரல் விட்டுக் குடைகிறது என்பது ஒரு அன்பர் நிலை. *உலகத்துச் செல்வ-மனைத்திற்கும் உரிமை யாரும் பெறும் நேரம் வந்ததை அன்பர் தாங்கொணாத் துயரமாக உணர்கிறார்.* வீடு கட்டுவது, கார் வாங்குவது, லாரி போக்குவரத்து, வசதியற்றவர் மேற்படிப்பு, *எதுவுமற்ற ஏழைகள் எல்லாம் செய்து ஏராளமாகச் சம்பாதிப்பது* இன்று நாட்டை சுபீட்சமாக்குகிறது. அவ்வளவும் கடனை அழித்தால் அழிந்து விடும் என அறிய நேரமாகாது. ஏழைகட்கு அதுவும் பெண்கட்கு அவர் நாணயத்தை மட்டும் நம்பி ரூ.20,000/- கடன் பாங்கு கொடுத்ததால் **micro credit** இன்று உலக ஸ்தாபனமாகி, நாடு சுபீட்சம் பெற்று, செய்தவருக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்துள்ளது. *மொழியென ஒன்று 10000 அல்லது 20000 ஆண்டிற்குமுன் உற்பத்தியாகியில்லாவிட்டால் இன்று உலகம் ஊமையாக, உளறுவாயனாக இருக்கும்.* மொழி வளம் மன வளம். கடன் மனிதனை சுயநலத்திலிருந்து பரநலத்திற்குப் போகச் செய்த முதல் வாயில். கடன் ஏற்பட்டதால் சாப்பிடப் பயிரிட்டவன், முடிந்த அளவுக்கு உற்பத்தி செய்து, மார்க்கெட்டில் அதை விற்றுப் பணமாக மாற்றி, சமூகத்தில் வாழ்வில் தவறியவன் பிழைக்க வழி செய்தது. இன்று அபரிமிதமான கடன் பெற்றுத் திணருபவர் 10 ஆண்டிற்குமுன் இதில் 10-இல் ஒரு பங்கும் கடன் பெற முடியாதவர். மேலும், சில ஆண்டுகட்குமுன் அவரால் கடனே வாங்கியிருக்க முடியாது. *உயிரை எடுக்கும் கடனின் பாசிட்டிவ் பக்கத்தைக் கவனித்தால் கொஞ்ச நாள் - 15 அல்லது 17 வருஷம் முன் - முன்னால் கடனே வாங்க முடியாதவர் ஏராளமான கடன் பெறும் அளவுக்கு நாடும் அவர் வாழ்வும் விரிந்திருப்பதை அறியவில்லை.* இது வாழ்வின் சட்டம் பணத்தில் பாசிட்டிவாக கோடீஸ்வரர் உற்பத்தியாகும் மார்க்கெட்டாகவும், நெகட்டி-வாக பணவீக்கம் இலட்சம் பர்செண்ட்டாகும் நிலையை உற்பத்தி செய்வதாகவும் மாறுகிறது. மாஸ்கோவில் கோர்பஷாவ்



தலைமையில் நாம் நடத்திய பொருளாதார மகாநாட்டில் **Drag** என்ற பொருளாதார நிபுணர் இதைப் பேசினார். தன் சொந்த நாட்டில் அவரை ஜனாதிபதியாக்க முடிவு செய்தபின் ரிசர்வ் பேங்க் கவர்னராக்கினர். இலட்சம் பர்செண்ட் பண வீக்கம் இக்கொள்கையால் 1% ஆக ஒரு வாரத்தில் மாறியது. இது 1992-இல் கடன் உயிரை எடுப்பதாக அறியும் அன்பர் கடன் பாரத்தை பாரமாகக் கருதாமல் *நாட்டின் பெரு வளத்தையும் தன் சொந்தத் திறமை - பணம் ஈட்டும் திறமையும் ஆயிரம் மடங்கு உயர்ந்ததை அறிந்தால்* இன்று அவர் எவ்வளவு கடன் பெற்றாரோ அதே அளவு செல்வத்தை அதே காலத்தில் அவரால் ஈட்ட முடியும் என அவர் காண்பார்.

'24 மணி நேரமும் பாரியாளுடன் பேசப் போதவில்லை' — அந்நியோந்நியமான மனைவியின் அன்புப் பேச்சை இழக்க வைத்ததால் அவர் தம்பி தன் மனைவியைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார் என எழுதிய தேவன் இந்த உண்மையை உள்ளத்தின் பெருமிதத்தில் கண்டவர். *அடுத்த கட்டமும் உண்டு.* அவளை நினைத்தபின் அவனியில் நினைக்கவே ஒன்றுமில்லை என்பவர் அவளில் தன்னையே இழந்து நிற்பார். அவர் வேலைகள் தானே அபரிமிதமாகப் பூர்த்தி செய்து கொள்ளும். ஏனெனில் உலகில் பிறந்த மொழி பேச்சாயிற்று. மார்க்கெட் உற்பத்தி செய்த மனம் மக்கட்செல்வமாகியது. *மனம் மனத்தின் தூய்மையில் நிலைத்து ஆத்மாவை அடைந்த ஆத்ம ஞானம் உலகில் ஆன்மீக வளமாகும்.* இது பகவானுடைய கொள்கை. ''பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே'' என்பது நாயனார் உணர்ந்த ஆன்மீக உன்னதம். பெண்ணின் அன்பையும், மார்க்கெட்டில் செல்வத்தையும், பொது வாழ்வில் **(Power)** அதிகாரத்தையும் பொங்கி வரும் புளகாங்கிதமாக நெஞ்சம் சிருஷ்டிக்கிறது. *அதுவே தெய்வம் வழங்கும் நீதி.*

(தொடரும்)

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### 5. பக்தனின் வாழ்வில் அன்னையின் பிரத்யட்சப் பலன்

கோயிலுக்குப் போய் தெய்வத்தை வணங்கும் மனிதன் வானுலகில் உறையும் தெய்வம் வழிபாட்டுக்குரியது என்பதை அறிந்தவன். நாளடைவில் இந்தப் பழக்கம் வேரூன்றி மனிதன் தெய்வத்திடமிருந்து விலகி, மரணத்திற்குப்பின் சேர வேண்டிய இடம் இறைவன் திருவடி என உணர்ந்து, தன் வாழ்வை வழிபாட்டுக்கு உரியதாகக் கொள்கிறான். இதன் பலன் தெய்வம் என்பது உலக வாழ்வில் உணர முடியாத ஒன்று என்று நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. உலகமாந்தர் அனைவரும் பக்தியால் உந்தப்பட்டவரானாலும், நடைமுறையில் ஆத்மீகம் பின்னணிக்குப் போய் பூஜையும், விழாவும் நிறைந்த மதச் சடங்குகளே நிதர்சனமாக நிலைக்கின்றன.

இறைவனின் சக்தியைத் தவம் மூலம் அறியலாம். எளிய மனிதன் தெய்வத்தை வழிபடலாம். சக்தி வாய்ந்த இறைவனின் திருவிளையாடல்கள் நமக்கில்லை என்று உலகமாந்தர் ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் இதுவே முடிவானதொன்றில்லை.

ஆபத்துக் காலத்தில் மனிதன் எழுப்பும் குரல் அலறலாகி, தெய்வத்தின் காதில் விழுந்து அற்புதம் என அறியும் வகையில் தெய்வம் அவனைக் காப்பாற்றுவதுண்டு. ஏதோ ஒரு சமயம் நிகழ்வது இது. மனிதனும் தெய்வத்தின் செயலை பார்ப்பதுண்டு. ஆனால் அது அன்றாட நிகழ்ச்சியாக அவன் வாழ்க்கையில் இல்லை.

அன்னையை ஏற்றுக்கொண்டு நாம் அன்னையிடம் வரும்பொழுது வழிபடும் தெய்வமாகவே நாம் அன்னையைப் புரிந்துகொள்கிறோம். இதனாலேயே அன்னை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி தாம் ஒரு சக்தி, இடையறாது இயங்கும்



தெய்வீகச் சக்தி என்று தம் நிலையை விளக்குகிறார். அன்பர்களுடைய வாழ்க்கையில் நடக்கும் விஷயங்கள் அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. திகைப்பிலிருந்து மீள்வதற்கு முன் மீண்டும் அவை போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தன் வாழ்க்கையில் புதிய ஒன்றைக் காண்பதாக நினைக்கின்றான். ‘இவ்விஷயமே வேறு-மாதிரியாக இருக்கிறது’ என்று அறிகிறான். எதிர்பாராத நிகழ்ச்சிகள், திடீர்த் திருப்பங்கள், தொடர்ந்து மனத்தில் சாந்தி நிலவும் ஆன்மீக உணர்வு போன்ற நிகழ்ச்சிகள் பக்தனைச் சிந்திக்க வைக்கின்றன. அன்னை வெற்று வழிபாட்டுக்குரிய தெய்வம் மட்டுமில்லை. ஜீவனுள்ள சக்தி என்பதை அவன் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிகழ்ச்சிகள் ஏற்படும். நாள் செல்லச் செல்ல, பக்தன் அன்னையைச் சக்தியாகக் காண்பது குறைந்து வரும். பின்னர் அவைபோன்ற நிகழ்ச்சிகள் நடப்பது நின்றுவிடும். எனினும், முதலில் தான் கண்டது பக்தன் மனதில் ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருக்கும். இக்கட்டுரையில் அன்னை, சக்தி நிறைந்த தெய்வம், அற்புதங்களை அன்றாடம் நிகழ்த்தும் சக்தி என்பதை எப்படிக் கண்டுகொள்வது, கண்டுகொண்டதை எங்ஙனம் நிரந்தரமாக நிலைபெறச் செய்வது என்று விளக்க முற்படுகிறேன்.

அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு, மனதில் அன்னை தெய்வம் என்றுணர்ந்து, அன்னையை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், பக்தன் மனித வாழ்க்கையின் மையத்திலிருந்து நகர்ந்து வந்து சூட்சும உடலின் சூழல் **(physical aura of Mother)** அன்னை உறையும் நிலையையடைந்து அன்னை தம்மை ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கும்பொழுது, அன்னை ஜோதியி-லிருந்து ஒரு பொறி புறப்பட்டு அவன் ஜீவனில் வந்து தங்கி, அவனுக்கு அன்னை பக்தன் என்ற ஆத்மீகத் தகுதியை நிரந்தரமாகத் தருகின்றது. அவன் அகவாழ்வில் ஏற்படும் மாறுதல்கள் அசாதாரணமானவை; எவரும் மறக்க முடியாதவை. இதன் பிரதிபலிப்பாக புற வாழ்வில் எதிர்பாராத பெரிய நல்லவை நடக்கின்றன. நாளடைவில் இந்தப் புதுமை பழகிப்போன காரணத்தால், பழமையாகிறது. ஆரம்ப காலத்தில்

ஏற்பட்ட ஜீவனுடைய சிறப்பும், வாழ்க்கைப் பொலிவும் தூசி படிந்து, கண்ணுக்குத் தெரியாத வண்ணம் புதைந்து விடுகின்றன.

சிறுபான்மையான ஒரு தரத்தார், வாழ்வில் அன்னையிடம் வந்த ஆரம்ப நாட்களிலும் இதுபோன்ற புதுமைகள் காணப்படுவதில்லை. அதனால் அன்னையின் சக்தி செயல்-படவில்லை என்றாகாது. செயல்படும் விதம் கண்ணுக்குப் புலப்படாத வகையில் இருக்கின்றது என்றாகும். தீராத வியாதி ஆரம்ப நிலையில் இருக்கின்ற ஒருவர், அன்னையிடம் வந்தால் அன்னையின் ஜோதி அவருள் எந்த அளவில் இறங்கிச் செயல்பட்டாலும், அதன் திறன் முழுவதும் அந்த வியாதியைக் குணப்படுத்தவே உதவும். அன்பருக்கு அது தெரிவது இல்லை. வியாதி வந்ததையே அவர் தெரிந்துகொள்ளவில்லை. அதைக் குணப்படுத்தியதையும் அவரால் தெரிந்துகொள்ள முடியாது. சனி தசையின் ஆரம்ப காலம், பயங்கர நோய், பலத்த கண்டம் வரும் நேரம் அன்பர் புதியதாக அன்னையை வந்தடைந்தால், அன்னையின் அருள் அவர் வாழ்வில் அற்புதங்களை நிகழ்த்து-வதை அவரால் பார்க்க முடியாது. வரும்பொழுதே அருளுக்கு வேலையையும் தாங்கி வந்திருக்கிறார் அவர். கண்டத்தைக் கரைப்பதையும், வியாதியின் மூல வேரை அரிப்பதையும், சனிபகவானுக்கு ஈடு கொடுப்பதையும் அருளுக்குக் கடமை-யாகக் கொண்டு வந்துள்ளார். இது தவிர, மற்றவர்கள் வாழ்க்கையில் கண்டறியாத புதுமைகள் தவறாமல் நிகழும். அருள் செயல்படும் வகைகள் ஆயிரம். மனிதன் அருளைப் பெறும் வகைகள் அநேகம். அருளிலிருந்து தப்பித்துப் போய் தன் சுபாவத்தின் சுக, துக்கங்களை மனிதன் அனுபவிப்பதும் அநேக வழிகள். அவற்றை எல்லாம் நான் விளக்க முற்பட-வில்லை. பெற்ற அருளின் பெரும் பேற்றை ஆயுள் முழுவதும் நிலைக்க என்ன செய்யலாம்? முதலில் பெற்று, பின்னர் இழந்த அருளை, மீண்டும் எப்படிப் பெறலாம் என்பதை மட்டும் இக்கட்டுரையில் கருதுவோம்.



நாமறிந்த மனித வாழ்வுக்கும், அன்னையை மனிதன் ஏற்றுக் கொண்டபின் அவனுக்கு அமையும் வாழ்வுக்கும் உள்ள வித்தியாசம் எவரும் மறுக்க முடியாத ஒன்று. குருடனுக்கும் புரியும் வகையில் இருப்பதால், கண்ணில் படாமல் இருக்காது. மனதில் ஆழ்ந்த புதிய அபிப்பிராயத்தை ஏற்படுத்தத் தவறாது. விரைவு, நெகிழ்வு, சந்தோஷம், வெற்றி, அழைப்பை ஏற்கும் விரைவு, ஆகியவை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக இருக்கும். திடீரென மரியாதை ஏற்படுகிறது. அன்றாடக் காரியங்கள் அபரிமிதமான பலனை அளிக்கின்றன. புதியதாகப் புத்திசாலித்தனம் வந்துவிடும். நாள் முழுவதும் உழைத்தாலும் களைப்பேற்படாது. உற்சாகம் வழக்கத்திற்கு மீறிய அளவில் உற்பத்தியாகும். எதுவும் அளவுகடந்து கூடிவரும். மனிதர்களும், நிகழ்ச்சிகளும் நம்மை வரவேற்றுப் பலன் அளிக்க விழைவது போல் தோன்றும். வாழ்வு பொலிவு பெறும். அன்னையை ஏற்றுக்கொண்டபின் அமையும் வாழ்வு நம் அன்றாட வாழ்வைவிடத் திறனுடையதாகையால், இந்த மாற்றம் நமக்குத் தெரிகிறது. புதுமை மாறினாலும், பக்தன் பழைய நிலைக்குத் தள்ளப்படுவதில்லை. அடுத்த நிலைக்குப் போக முடியாமல் அங்கேயே நிற்பான். தொடர்ந்த முன்னேற்றம் தொலைவுக்குப் போய்விடும். இருப்பினும் அடிக்கடி மின்னல்போல் அன்னையின் சக்தி இங்கும், அங்குமாய்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

புதியதாய் அன்னையிடம் வரும்பொழுது நமக்கும், அன்னைக்கும் உள்ள இடைவெளி பெரியதாய் இருப்பதால், நடக்கும் நிகழ்ச்சிகள் ஆச்சரியமாக இருக்கின்றன. அன்னை பழகிப்போனபின் புதுமை குறைந்து, நிகழ்ச்சிகள் பழமையாய் விடுகின்றன. அதனால் அன்னையிடம் இருந்து நாம் பெறக்கூடியது அவ்வளவுதான் என்பது இல்லை. புதுமை-யுணர்வு தொடர்ந்திருந்தால், புதுமை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கும். அன்னையைப் பல அளவுகளில் நாம் அறியலாம்.

முதற்கட்டம் முடிந்து பழகிப்போனபின், அன்னையை அதிகம் தெரிந்து கொள்ள முயன்றால் ஆரம்ப காலத்தைப்போல்

மீண்டும் வாழ்க்கை மாறும். ஒவ்வொரு கட்டம் பழகிப்போனபின், அன்னையை அதிகமாக ஏற்றுக்கொள்ள முயல்வது, தொடர்ந்து அன்னையை நம் வாழ்வில் ஆரம்ப காலத்தில் செயல்பட்டதுபோல் செயல்பட உதவும். அதிகமாகத் தெரிந்துகொள்ள உதவுவது ஆர்வம் (aspiration). அன்னையின் சக்தியைப் பெற்றுத் தருவது அழைப்பு. எனவே ஆர்வமும், அழைப்பும் சேர்ந்து, தொடர்ந்து செயல்பட்டால், அன்னை என்றும் நம் வாழ்வில் புதுமணம் பரப்பும் நறுமலராக விளங்குவார்.

ஒருவர் அன்னையை நாள் முழுவதும் நினைவுகூர்ந்தால் அவர் அகவாழ்வு ஒளி பெறும்; சிறக்கும். ஆனால் இக்காரணத்தாலேயே அன்னை செயல்பட ஆரம்பித்துவிடமாட்டார். ஏராளமாகப் படிக்கும் பையனுக்கு அறிவு அதிகமாகும். ஆனால் அப்படிப்பட்ட படிப்பால் ஒரு பட்டத்தை எடுத்துவிட முடியாது. பட்டம் பெற அதற்குரிய புத்தகங்களை ஆழ்ந்து பயில வேண்டும். அதே போல் அன்னையை இடைவிடாது நினைத்தால் மனநிலையை உயர்த்துமே தவிர, எந்தக் குறிப்பிட்ட காரியத்திலும் அன்னையை வெளிப்படுத்த உதவாது.

ஒரு செயலில் அன்னை வெளிப்பட வேண்டுமானால், அச்செயல் அன்னையின் சக்தியால் நிரம்பி வழிய வேண்டும். நம் வாழ்வு பல தரப்பட்டது. ஆபீஸ் வேலை, வீட்டு வேலை, சொந்த வேலை என பல வகைகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் தனித்தனியானது போல் தோன்றும் அளவுக்கு அமைந்துள்ளன. ஒவ்வொரு வேலையிலும் பல பகுதிகள் உள்ளன. கடிதம் எழுதுவது என்பது சொந்த வேலையில் ஒரு பகுதியானாலும், அதுவே ஒரு தனித்தன்மையுடைய முழு வேலை போலிருக்கிறது. குளிப்பது என்பதை ஒரு குறிப்பிட்ட சிறு வேலை எனலாம். அன்றாட வாழ்வில் அதுபோன்ற பல்வேறு வேலைகள் உள்ளன. சாப்பிடுதல், குளித்தல், தூங்குதல், படித்தல், விருந்தினரை வரவேற்றல், நட்பு, உறவு, வேலையிடுதல், கடைக்குப் போவது, பொழுதுபோக்கு, புதிய



துணி வாங்குவது, விசேஷம், பயணம் ஆகியவை அத்தன்மையானவை.

அன்னையை வாழ்வில் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளுதல் முழு யோகம் என்பதால், அதைக் கருதாது, ஏதாவது ஒரு முழுக் காரியம் (complete act) அன்னையால் நிரப்பப்பட்டு அன்னையின் புதுமை பொலிவுற வெளிப்படுதல் எப்படி என்பதை மட்டும் கருதுவோம். தீவிர பக்தர் எவராலும் இதைச் செய்ய முடியும் என்பதால் இதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். நாம் எடுத்துக்கொண்ட செயலின் எல்லாச் சிறு பகுதிகளிலும் அன்னையை நினைவுகூர்ந்தால் அன்னை அச்செயலில் வெளிப்படுவார். கடைக்குப் போவதை ஒரு முழுக் காரியமாகக் கொண்டு இந்தச் சோதனையைச் செய்யலாம். கடைக்குப் போவதுடன் தொடர்புள்ள எல்லாச் சிறு செயல்களிலும் அன்னையை நினைத்துச் செயல்பட்டால், போய் வந்தவுடன் அன்னை அச்செயல் முழுவதுமாகப் புதுமையை நிரப்பித் தம் முத்திரையிட்டது தெரியும்.

ஒரு காரியம் என்பது எண்ணமாக உதித்து, உணர்வாகப் பூரித்து, செயலாக நடக்கிறது. ஒரு டிக்ஷனரி வாங்க வேண்டும் என்றவுடன் அன்னை நினைவுக்கு வருவதில்லை. எந்தக் கடையில் வாங்கலாம், எத்தனை மணிக்குப் போகலாம், யாரை அழைத்துப் போகலாம் என்றெல்லாம் மனதில் தோன்றும். முதலில் எண்ணம் தோன்றியவுடன், அதை விலக்கி அன்னையை நினைக்க வேண்டும். அதேபோல் ஒவ்வொரு எண்ணத்தையும் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதாவது எண்ணத்தை விலக்கி, அன்னையை நினைக்க வேண்டும். அதையே இங்குச் சமர்ப்பணம் என்று கூறுகிறேன். அதேபோல் கடையுள் நுழைந்தவுடன், அங்குள்ளவரைப் பார்த்தவுடன் ‘இவர் இனியவர்’ அல்லது ‘இவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. இன்று இவன் நிற்கிறான்’ என்று விருப்பான உணர்வோ, வெறுப்பான உணர்ச்சியோ தோன்றும். எண்ணங்களைச் சமர்ப்பணம் செய்ததுபோல் உணர்ச்சிகளையும் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதாவது உணர்ச்சிகளை

விலக்கி, அன்னையை உணர வேண்டும். அதேபோல் நம் ஒவ்வொரு செயலையும், டிக்ஷனரி வாங்குவதில் உள்ள ஒவ்வொரு செயலையும், சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

கடைக்குப் போவது என்ற காரியத்தைக் குறிப்பிட்டு நம் சோதனைக்குட்படுத்தி, சமர்ப்பணம் செய்ய ஆரம்பித்து, தொடர்ந்து வந்தால், இதனுடன் சம்பந்தப்பட்ட எரிச்சலான காரியங்கள் விலகிவிட்டதைப் பார்க்கலாம். கடைக்குப் போக ஆரம்பித்தால் அதற்குத் தேவையான சந்தர்ப்பங்கள் அனைத்தும் தாமே பொருந்தி அமைந்து, செயல் சிறப்பாக இருக்கும். பொருத்தத்தில் ஆரம்பித்து, நம் மனதில் இல்லாத சிறப்புகள் எல்லாம் இந்தச் செயலில் ஒன்று ஒன்றாய் வெளிப்படும். டிக்ஷனரி வாங்குவதையே எடுத்துக் கொள்வோம். நாம் கடைக்குப் போய் டிக்ஷனரி வேண்டும் என்றவுடன், புதிய பதிப்பு ஒன்று வந்திருக்கிறது. 'பழைய பதிப்பில் 1920 ஆண்டு வரையுள்ள சொற்கள் சேர்க்கப்பட்டன. இதில் 1952 வரையுள்ள புதிய சேர்க்கையுள்ளது' என்ற சேதி கிடைக்கும். டிக்ஷனரியையும், அதற்கு உரிய மற்றவைகளையும் எடுத்துக்கொண்டு ஒரு சேல்ஸ்மேன் உங்களை வந்து ஆபீஸில் சந்திக்கும் வினோதமும் தெரியும். நினைவில் தட்டுப்பட முடியாதபடி ஒரு நண்பர் வந்து எந்த டிக்ஷனரியை நாம் வாங்க வேண்டும் என விருப்பப்பட்டோமோ அதையே கொண்டுவந்து அன்பளிப்பாகவும் கொடுப்பதைப் பார்க்கலாம். அடுத்தடுத்து நம்ப முடியாத செயல்கள் 'கடைக்குப் போவது' என்ற இக்காரியத்தில் தொடர்ந்து நடக்கும். சோதனைக்காகத் தெரிந்தெடுத்த செயல் 'கடைக்குப் போவது'. சமர்ப்பணத்தை முழுமையாக இங்கு மேற்கொள்கிறோம். அன்னையின் பூரண வெளிப்பாட்டை இங்கு மட்டுமே காண முடியும். மற்ற செயல்கள் என்றும் போலிருக்கும். அழைப்பையும் சமர்ப்பணத்துடன் இணைத்து விட்டால் இதற்கடுத்த கட்டத்திலும் நிகழ்ச்சிகள் ஏற்படும்.

தரிசனங்களுக்கு வருவதை ஒருவர் சமர்ப்பணத்தின் முழுப்பிடியில் கொண்டுவந்தார். தொடர்ந்து 22 வருஷங்களாக



எந்த ஹர்த்தாலும், தடைகளும், ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன், முக்கியமான திருமணங்கள், தவிர்க்க முடியாத முக்கியத்-துவங்கள், உடல்நலக் குறைவு, புயல், வெள்ளம் ஆகிய எதுவும் அவர் தரிசனங்களுக்குப் போவதை ஒருமுறைகூட தடை செய்யவில்லை. எல்லாம் தாமே ஒதுங்கி, விலகி வழிவிட்டன. அவர் செய்த சமர்ப்பணத்தை அன்னை ஏற்றுக்கொண்டதற்கு அது அடையாள முத்திரை.

தம் வீட்டில் தியானம் குறிப்பிட்ட நேரத்தில் செய்ய ஏற்றுக் கொண்ட பக்தர், தியான நேரத்தில் மின்சாரம் நிற்கக்கூடாது என்பதற்காக, தியானம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் சமர்ப்பணம் செய்ததன் விளைவாக, வாரத்தில் 10 முறை நின்றுபோகும் கரெண்ட், 12 ஆண்டுகளாக ஒரே ஒரு தடவைகூட அவருடைய தியான நேரத்தில் நின்றதில்லை. ஒரு கடையில் நீங்கள் சேல்ஸ்மேனாக இருந்தால், விற்கும் ஒவ்வொரு பொருளையும் இதுபோன்ற சமர்ப்பணத்திற்கு உட்படுத்தினால், வருஷம் பத்தானாலும், உங்கள் கையால் விற்ற பொருள்கள் பத்தாயிரமானாலும், ஒரே ஒரு பொருளிலும் குற்றம், குறை, திருப்பிக் கொடுப்பது என்பதெல்லாம் இருக்காது. குழாய் கிணறு (bore well) தோண்டுவது, லாட்டரி சீட்டு வாங்குவது போல் இதை மேற்கொண்டு திவாலானவர்கள் அநேகர். சமர்ப்பணத்திற்கு ஆளாக்கி, தாம் தோண்டிய 15, 10 கிணறுகளிலும் வற்றாத ஊற்றைக் கண்டுபிடித்தார் ஓர் அன்பர். பாங்கில் கடன் பெறுவதைச் சமர்ப்பணம் செய்து, தம்முடைய சிறு அக்கௌண்டில் 3 ஆண்டு காலம் தாம் கேட்டவை-யெல்லாம் பெற்றார் மற்றொருவர். அதிலும் ஒரு சிறப்பு. பாங்க், ஈடில்லாமல் அவருக்கு தானே முன்வந்து 13 இலட்சம் கொடுக்க வேண்டும் என்று கருதியது. இந்தக் கருத்தின் முழு விளக்கம் கொடுப்பதற்குமுன், இதனுடன் சம்பந்தப்பட்ட வேறு சில முக்கியமான விஷயங்களையும் கருத வேண்டியிருக்கிறது.

ஒரு முழுக் காரியம் (complete act) அன்னையின் சக்தியால் நிரப்பப்பெறுமானால், அன்னை தம்மை அக்காரியத்தில் முழுவதுமாக வெளிப்படுத்துவார். எந்த முறையினால்

அக்காரியம் சக்தியைப் பெற்றது என்பது முக்கியமில்லை. ஆழ்ந்த பிரார்த்தனைக்கு அதே பலன் உண்டு. ஜீவனின் ஆழத்திலிருந்து பிரார்த்தனை கிளம்புவதால் அது அன்னையின் சக்தியைப் பூரணமாகப் பெறுகிறது. அன்னையின் அற்புதத்தை அச்செயலில் காண்கிறோம். தம் படிக்கும் பழக்கத்தைச் சமர்ப்பணம் செய்து, அன்னையை ஒருவர் தம் படிப்பில் கண்டுவிட்டார் என்று வைத்துக்கொள்வோம். அவர் படித்துக்-கொண்டிருக்கும்பொழுது 20 வருஷமாகச் சொந்த ஊரில் செய்துகொண்டிருந்த வேலை இன்று வெளியூருக்கு மாற்ற-லாகப்போகிறது என்ற செய்தி கிடைத்தால், சமர்ப்பணத்தால் அவர் படிப்பு பெற்ற பெரும்பலன் அப்பொழுது அவர் செய்யும் பிரார்த்தனைக்குக் கிடைக்கும். தாம் மாற்றலாகக்கூடாது என அவர் செய்யும் பிரார்த்தனைக்கு சமர்ப்பணத்தில் முழு ஆற்றல் ஏற்பட்டு, பிரார்த்தனை சிறப்பாகப் பூர்த்தியாகும். ஆழ்ந்த பிரார்த்தனைக்கும், சமர்ப்பணத்திற்குள்ள திறனுண்டு. பயத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் செய்யும் பிரார்த்தனைகள் முழுமையானவை. ஏனெனில் அவை ஆழத்திலிருந்து வருபவை. அன்னை அவற்றை முழுமையாகப் பூர்த்திசெய்வார்.

மற்றும் ஒரு கருத்து; அது அருளைப் பற்றியது. சமர்ப்பணத்தால் புனிதமடைந்த பூரணச் செயல் (முழுக் காரியம், complete act) அன்னையின் சிறப்பை வெளிப்படுத்து-வது வேறு, அருளின் செயலால் அன்னை வெளிப்படுவது வேறு. அருள் தானே செயல்படுவது. சமர்ப்பணத்தால் செயல் புனிதப்பட்டு, அன்னையின் சக்தியைத் தன்னை நோக்கி இழுக்கிறது. சமர்ப்பணம் பூமியிலிருந்து இறைவனைக் கூவி குரல் கொடுத்து அழைக்கிறது. அருள் தன்னிச்சையால், தான் விரும்பியபொழுது, விரும்பியவண்ணம் தானே செயல்-படுகிறது. சமர்ப்பணத்தையும், அருளையும் ஒன்றோடொன்று கலந்து தெளிவைக் கலக்குதல் தவறு.

ஒரு செயலில் அன்னை தம்மை வெளிப்படுத்துவது என்றால் என்ன? நம் ஊனக்கண்ணுக்கு அன்னையின் வெளிப்பாடு தெரியுமா? அன்னையின் சக்தியைத் தெளிவாக



விளக்க முடியுமா? வாழ்க்கைக்கும், அதற்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்ட முடியுமா?

இன்றிருக்கும் நிலையைக் காப்பாற்ற முயல்வதே வாழ்க்கையின் இயல்பு. வாழ்க்கையில் சிருஷ்டி என்று நாம் சொல்வது நமக்கு ஏற்கனவே தெரிந்த காரியங்களைச் சிறப்பாகச் செய்வதைத்தான். அன்னையின் சக்திக்கு ஒரு சிறப்புண்டு. புதியதாகப் படைக்கும் ஆற்றல் அதற்குண்டு. சிருஷ்டிக்கும் (creative) திறனுடையது அன்னையின் ஆற்றல் என்றால் இதுவரை நாம் கண்டறியாததைச் சிருஷ்டிக்கும் ஆற்றல் என்று பொருள். புது வழியில் பிரச்சனைகளைத் தீர்ப்பது, புதிய முறையில் செயல்படுவது, புதிய வாழ்க்கைப் பாதைகளைச் சமைப்பதே அதன் குறிப்பான திறன். பழைய பிரச்சனைகளுக்குப் புதிய பாணியில் தீர்வு காண்பது, புதிய வாய்ப்பை ஏற்படுத்துவது அன்னைக்குரிய சிறப்பு. அன்னையின் சக்தியால் ஏற்படும் அனைத்துக்கும் ஒரு முத்திரை உண்டு. ஏதாவது ஒரு வகையில் அது புதியதாக இருக்கும். அதற்கும் மேலாக, இந்தப் புதிய சக்தியை உற்பத்தி செய்யும் திறமையும் உடையது. தானே வளரும் தன்மை உடையது.

எங்கெல்லாம் புதிய பாதை தென்படுகிறதோ, புதிய வழி உற்பத்தியாகிறதோ, புதியதாக ஏதாவது ஒன்று இருக்கிறதோ, அங்கெல்லாம் அன்னையிருப்பதற்கு நியாயம் உண்டு. முரடன் சாந்தமாகப் பழகினால், வழக்கத்திற்கு மாறாக முதலாளி இனிமையாகப் பேசினால், விதண்டாவாதக்காரன் நியாயமாகப் பழகினால், சுக்காஞ்செட்டி தாராளமாக இருந்தால், பேரத்திற்குப் பேர்போனவன் சொன்ன விலைக்கு வாங்கிச் சென்றால், அன்னை அங்கெல்லாம் செயல்படுகிறார் என அறியலாம்.

வாழ்க்கை ஆற்றொழுக்காகப் போகிறது. அதற்கு ஒரு முறை உண்டு. எதற்கும் ஒரு காலவரையறையுண்டு. பட்டம் வாங்க 4 ஆண்டுகள் தேவை என்றால், எவராலும் அதை 4 மாதத்தில் பெற வழியில்லை. காலத்தின் கதியைக் கதிரவனாலும் மாற்ற முடியாது. பட்டத்திற்கு 4 ஆண்டுகள், வாழை பலன் தர

12 மாதங்கள், பிறந்த குழந்தை நடக்க ஒரு வருஷம் என ஒவ்வொரு செயலுக்கும் முறையும், கால வரையறையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஏட்டில் படித்ததை வாழ்க்கை அனுபவமாக மாற்ற சில ஆண்டுகள் தேவை. பதட்டப்பட்டவன் அடங்கப் பல மணி நேரம் தேவை. காலம் வந்துவிட்டால் நடக்கும்; நடந்துவிடும். அதை யாராலும் தடுக்க முடியாது. காலம் வருமுன் அதை முடிக்க உலகில் ஒரு சக்தியில்லை. காலத்தின்முன் அனைத்தும் தலைவணங்கும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது வழக்கு. அன்னையின் சக்தி விரை-வானது. ஒரு வினாடியில் 26,000 மைல் சுற்றளவுள்ள பூமியை 7 முறை சுற்றிவரும் ஒளியின் வேகத்தைவிட அதிக வேகமாகச் செயல்படக்கூடியது. மின்னல் வேகத்தில் செயல்படுவதே அதன் இயல்பு. மனித வாழ்வின் இருள் அதன் வேகத்தைத் தடுக்கின்றதே தவிர அன்னையின் சக்திக்குரிய வேகம் அபரிமிதமானது.

அதன் வேகம் சிருஷ்டிக்குமுன் உள்ள இறைவனின் சக்திக்குரிய வேகம். அது மனிதனுக்குத் தெரியாமற்போகாது. அலுவலக விசாரணையை (departmental enquiry) ஆரம்பிக்கப் பல மாதங்களாகும். குற்றம் சாட்டியபின் அதை நீக்க எல்லாவிதமான சாதகச் சூழ்நிலைகள் இருந்தாலும், மீண்டும் பல மாதங்களாகும். 4 வருஷம் திட்டம்தீட்டி, 6 மாத காலமாகத் தயார்செய்து ஓர் அன்பர்மீது சுமத்தப்பட்ட அபாண்டத்தை, அன்னையிடம் ஒரு நாள் காலை 10 மணிக்குச் சொன்ன-பொழுது, அன்று மாலை குற்றப்பத்திரிக்கை கிழித்தெறியப்-பட்டு குற்றத்தைச் சுமத்தியவர் தலைகுனிந்து, வெட்கி, தான் செய்த பாவத்தை அழித்தெறிந்தார். அன்னையின் முத்திரைக்கு மற்றோர் அடையாளம் உண்டு. அன்னையால் தீர்ந்த பிரச்சனைகளில் சொச்ச, நச்சம் என்றிருக்காது; பாவத்தைப் பவித்திரமாகத் துடைத்து எடுத்துவிடும்.

அதிர்ஷ்டக்காரர் பலருண்டு. 100 கோடி கம்பெனிக்குப் பேர் தெரியாத சப்ளையராக ஒரு அன்பர் வந்துசேர்ந்தார். அன்னையின் முறைகளைத் தம் கம்பெனி நிர்வாகத்தில்



முறையாகப் பயன்படுத்தினார். 10 ஆண்டுகளுக்குள் தாம் சப்ளை செய்யும் கம்பெனியின் அளவுக்கு வளர்ந்துவிட்டார். 50 ஆண்டில் முதலாளி பெற்ற பெருஞ்செல்வத்தை ஊர், பேர் தெரியாத இவர் 10 ஆண்டுகளில் பெற்றார்.

ஒரு பக்தர் தம் படைப்புத் திறன் முழுவதும் பயன்படுத்தி, திறமையான திட்டம் தீட்டி, பணக்காரர்களின் உதவியால் ஊரார் பொறாமைப்படும் அளவுக்கு, 5 ஆண்டில் பிரபலம் அடையும் அளவுக்கு வெற்றிகண்டார். அடுத்தத் திட்டம் தீட்டினார். தம் புத்திசாலித்தனத்தைப் புறக்கணிப்பது என்று முடிவு செய்தார். பணக்காரரை நாடக்கூடாது எனக் கருதினார். எதற்காகவும் அலைவதில்லை என்று சபதம் பூண்டார். யாரையும் போய்ப் பார்க்க வேண்டாம் என்றார். எதையும் எதிர்பார்த்து செயலாற்றுவதில்லை எனக் கொண்டார். மனித யத்தனத்தை நம்ப வேண்டாம், மற்றவர்களையும் எதிர்பார்க்க வேண்டாம் என்பதே தற்போதைய கொள்கை. இந்தத் திட்டம் நினைவுக்கு வரும்பொழுதெல்லாம், அந்நினைவைப் புறக்கணித்து அன்னையை மட்டும் நினைப்பது என்ற விரதத்தை மேற்கொண்டார். நிலைமை மாறியது. புதியன புறப்பட்டன. காண்பவரெல்லாம் கருத்தொருமித்தவராய் கலந்துரையாடினர். அவரையறியாதவருக்கு அவர் திட்டத்தில் திடீரென ஆர்வம் ஏற்பட்டது. அளவுகடந்த செல்வர்களிடம் அறியாதவர்கள் தாங்களே தலையில் அட்சதையைப் போட்டுக்கொண்டு அவரது திட்டத்தைப்பற்றி பிரஸ்தாபம் செய்தனர். ‘கேட்கும் ஒலியிலெல்லாம் உந்தன் கீதம் இசைக்குதடா நந்தலாலா’ என்பதற்கொப்ப, வாயைத் திறந்து பேசியவர் அனைவரும் நல்ல வார்த்தைகளை மட்டுமே பேசினர். அனைவரும் இவரது திட்டத்தைச் சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமென்ற ஆர்வம் காட்டினர். எல்லாம் கூடிவந்தன. திட்டம் இரு மடங்காகியது. 63-ஆம் நாள் அனைத்தும் நடந்தேறியது. நம்மை ஒதுக்கி, நம் அறிவை ரத்து செய்து, நம் அவசரத்திற்கு விடுமுறை அளித்து, நம் கணக்கைக் காததூரம் தள்ளிவைத்து, ஆசையை அழித்து, அன்னையை மட்டும்

பூரணமாக ஏற்றுக்கொண்டு, அன்னையை செயல்பட நாமும், நம் அறிவும் முழு அனுமதியளித்தால், முதல் திட்டத்தில் 63 மாதம் அல்லலுற்று சாதித்ததை அன்னை 63 நாளில் இப்பொழுது அற்புதமாகச் செயல்படுத்துகிறார்.

அன்னையின் சக்தி, சத்தியத்தின் சக்தி. வாழ்வு பொய்யால் ஆனது. வாழ்வுக்கும் சத்தியம் தேவை. தன் பொய்யை ஆதரிக்கும் அளவுக்கு மட்டுமே மெய் தேவை. ஒருவர் உண்மை மட்டுமே பேச முடிவு செய்தால், தம் பூர்வோத்திரங்களை ஒளிவு, மறைவின்றி கூறினால் அவருக்கு வேலை கிடைப்பது கஷ்டம்; திருமணம் ஆகாது. 'உடையது விளம்பேல்', 'தோழனோடும் ஏழமை பேசேல்' என்பது உலகம் எதிர்பார்ப்பது. சொல்ல வேண்டியதைச் சொல். எல்லாவற்றையும் சொன்னால் உண்மை பேசுவதாக அர்த்தமில்லை என்பதெல்லாம் சமூகம் நம்மிடம் நிர்ப்பந்தமாக எதிர்பார்ப்பதாகும். எதிர்மறையாக, அன்னை பூரணமான சத்தியத்தை முழுவதுமாக எதிர்பார்க்கின்றார். எவ்வளவுக்கெவ்வளவு உண்மையிருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அன்னையின் வெளிப்பாடு சிறக்கும். பார்லிமெண்டில் வந்து உன்னை அலசிப் பார்க்கலாம், பயங்கர எதிர்ப்பு உருவாகலாம். அன்னை, உன்மீது சுமத்தப்பட்ட பழியை அழிப்பதுடன், புதிய வெற்றி வாகைகளையும் வழங்குகிறார். உன் சத்தியம் அன்னையின் பொக்கிஷம். சத்தியமே பேசினால் வாழ்க்கையில் சத்தியமாக அவன் அழிந்துவிடுவான்; அழிக்கப்படுவான். வாழ்க்கைக்கே உரிய வலிமை அது. சத்தியம் மட்டும் பேசினால் அன்னை அவனுக்குச் சத்தியஜீவியத்தை **(supramental consciousness)** அளிக்கிறார். எது வாழ்க்கையில் அழிவுக்கு அடிகோலுகிறதோ, அதுவே அன்னையிடம் மகுடம் பெற அஸ்திவாரமாகிறது. எங்கெல்லாம் சத்தியம் ஜெயிக்கின்றதோ, அங்கெல்லாம் அன்னையைக் காணலாம். கசப்பான உண்மைகள், கற்பனைக்கெட்டாத விருதுகளைக் கொண்டுவரும் அபூர்வ நிகழ்ச்சிகளும் உண்டு. மனிதன் எதையும் ஒரு நேரத்தில் விட்டுக் கொடுத்துவிடுவான். மானத்தை இழக்க மனித மனம்



சம்மதிக்காது. பாதாளத்தில் புதைந்துள்ள உண்மைகளைக் காப்பது மானம். அதே ஆழத்தில் மறைந்துள்ள அவமானத்தையும் காத்துக்கொண்டிருப்பது சொரணை என்று சொல்லப்படுவது. கோரமான உண்மைகள் ஆழமான இடத்தில் இருக்கலாம். சொரணையை இழந்தால்தான் அவற்றையும் சொல்ல முடியும். சூடு, சொரணை எனப்படுபவைகளையும் ஒதுக்கி வைத்து உண்மை பேசினால் மட்டுமே இறைவனின் கருவியாகி, பிரபஞ்சத்தில் இறைவனின் பெரிய காரியங்கள் ஜெயிக்க மனிதனால் துணைநிற்க முடியும் என்கிறார் அன்னை.

அன்னையின் சக்தி செயல்பட தனியே அறிவு தேவையில்லை. இதன் அமைப்பு இன்று உலகில் இல்லாத ஒன்று. சக்தி வெளிப்பட்டால், அறிவு தானே செயல்படும் அமைப்பு இதனுடையது. ஏனெனில் அறிவும், திறனும் செயல்படும் அமைப்பு இதனுடையது. ஏனெனில் அறிவும், திறனும் ஒருங்கே அமைந்த சக்தி அன்னையின் சக்தி. ஓர் இன்ஜினீயர் வீடு கட்ட முற்பட்டால் அவருக்கு அறிவு இருக்கிறது. ஆள் பலமும், பணமும் வீட்டைக் கட்டி முடிக்கத் தேவை. அவை தேவையான சக்தியை அளிக்கின்றன. ஒரு காண்ட்ரக்டரிடம் ஏராளமான ஆட்களும், மூட்டையாகப் பணமும் இருந்தால், அவரால் ஒரு பாலத்தைக் கட்ட முடியாது. ஓர் அனுபவமுள்ள இன்ஜினீயரை அவர் நாடிச் செல்ல வேண்டும். நம் வாழ்வில் அறிவும், திறனும் தனித்து இயங்குகின்றன. ஒரு காரியம் நடைபெற அவை இணைந்து செயல்பட வேண்டும். அன்னையின் சக்தியில் அறிவும், அன்னையின் ஞானத்தில் சக்தியும் உள்ளுறைந்து காணப்படுகின்றன. ஒன்றில் மற்றது பிணைந்துள்ளது. தனக்கில்லாத அறிவை ஒரு மனிதன் உபயோகப்படுத்துவதைப் பார்த்தால், அது அன்னையின் சக்தி என அறியலாம். திறனற்ற ஒருவன் தன் அறிவை வெளிப்படுத்தும்போது அதற்குரிய சக்தி இயல்பாக அமைந்துள்ளது என்றால் அதை அன்னையின் ஞானம் என நாம் உணரலாம். அன்னையின் சக்தியைப் பெற்றால் அதற்குரிய ஞானம் தானே ஏற்படும். அன்னையின்

ஞானத்தை அடைந்தால் அதற்குரிய சக்தியை அதுவே கொண்டு வரும்.

அறிவில் சிறந்த அன்பர் பல இலட்சம் சம்பாதிக்கும் திட்டத்தை ஆயிரம் ரூபாய்கூடக் கையில் இல்லாமல் ஆரம்பித்தபொழுது, திட்டத்திற்குத் தேவைப்பட்ட முழுப் பணமான ரூ.1,15,000 அவரைத் தேடி வந்தது. தேவைப்பட்ட எல்லாத் திறனையும் (பணத்தையும்) தம்மை நோக்கி இழுக்கும் திறனுள்ள அவருடைய அறிவு, அன்னையின் ஞானம் என்பதில் ஐயமில்லை.

ரூ.100, மாதச் சம்பளம் பெறும் ஒருவர் 4 லட்ச ரூபாய்க்குத் திட்டம் தீட்டினார். பாங்க் அவரது திட்டத்தை சாங்ஷன் செய்தது. பாங்க் சேர்மனிடம் விஷயம் போனபோது அவருக்கு ஏராளமான கோபம் வந்துவிட்டது. மோசடி எனச் சந்தேகப்பட்டார். மனுதாரர் சேர்மன்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அவரிடம் சத்தியம் இருந்தது. ஆனால் அவ்வளவு பெரிய அதிகாரியிடம் அவர் பேசியது இல்லை. ஒரு கணம் திகைத்துப்போனார். அன்னை அவர் கட்சி. இது மாதிரி சந்தர்ப்பங்களுக்குரிய அனுபவமோ, திறமையோ அவருக்கில்லை. தம் கட்சியை எடுத்துச் சொன்னார். அபரிமிதமாக வெற்றி பெற்றார். சேர்மன் அவரைப் பாராட்டினார். எப்படிப் பேசினோம் என்று அவருக்குத் தெரியாது. பின்னர் யோசித்தபொழுது தாம் கூறிய வாதங்கள் தமக்கே வியப்பளிப்பதை உணர்ந்தார். அவருடைய திறன் அன்னையின் சக்தி என்பதால், அதற்கு உரிய அறிவு தானே அவருக்கு ஏற்பட்டது.

தம்முடைய இராசியை எவரும் அறிவார்கள். என் கர்மவினை என்று சொல்வார்கள். சிலருக்கு எதுவும் பலிக்காது. மற்றவர்களுக்குப் பல தோல்விகளுக்கப்புறம் பலிக்கும். சிலருக்குப் பண விஷயம் கூடி வராது. வேறு சிலர் எதைச் செய்தாலும் புரளி பறக்கும். சிலருடைய இராசி வீட்டில் இருப்பவர்களே எப்பொழுதும் எதிர்ப்பார்கள். அப்படிப்பட்டவர் அன்னையை ஏற்றுக்கொண்டு செயலில் இறங்கி, தங்கள் இராசியும், கர்மமும் வந்து கழுத்தை அறுக்கவில்லை என்று கண்டால் அவர்கள்



செயலில் வெளிப்படுவது அன்னையின் சக்தி என நாம் அறியலாம். கர்மம் விலகுகிறது என்றால் அங்கு அன்னை இருக்கிறார்கள் என்று பொருள். வாழ்க்கை கர்மத்திற்கு அடிமை. கர்மம் செயல்பட வாழ்க்கை பூரணமாக அனுமதிக்கும். சமர்ப்பணத்தால் ஒரு செயல் அன்னையின் சக்தியால் நிரம்பினால், அச்செயலில் கர்மபலன் இருக்காது. அதை விட்டுக் கர்மம் விலகும்.

‘சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி குறுக்கே நிற்கிறான்’ என்போம். பார்லிமெண்ட் சாங்ஷன் செய்தபின் நிர்வாகம் தடை செய்யும். M.P.S.C. பாஸ் செய்தபின் போஸ்டிங் வராது. தலைமை அலுவலகம் ஆர்டர் போட்டபின் உள்ளூர் காஷியர் ஒன்பது தடைகளைக் கிளப்புவார். அன்னையின் சக்தியால் நிரப்பப்பெற்ற செயல்முன் அனைத்துத் தடைகளும் விலகிப்போகும்.

அன்னையின் சக்தி ஒரு செயலில் நுழைந்துவிட்டால், பழம் பெருச்சாளிகளை விரட்டிவிட்டு வேகமாகச் செயல்படும். தாம் செயல்படச் சாதகமான சூழ்நிலையில்லை என்றால் தமக்கேற்ற சூழ்நிலையை அன்னை ஏற்படுத்திக் கொள்கிறார். பழைய சந்தர்ப்பங்கள் மூலமாகவும் அன்னை சக்தி செயல்படும். ஆனால் புதிய சந்தர்ப்பங்கள் மூலமாகச் செயல்படுவதை அது பெரிதும் விரும்பும்.

பொதுவாக அன்னையின் சக்தி எப்படிச் செயல்படுகிறது, அதன் வழிவகை என்ன என்று நாம் புரிந்துகொள்ள முடிவதில்லை. நாம் முடிவான பலனை மட்டுமே பார்க்கிறோம். நாம் இருளில் புதைந்து உள்ளோம். அன்னை மின்னலாகச் செயல்படுகிறார். இருளை விலக்கி, பலனை அளிக்கிறார். க்ஷணத்தில் நம்மிருள் மீண்டும் வந்து நம்மைக் கவ்விக்கொள்கிறது.

தொடரும்...

## அன்பர் அனுபவம்

N. ரவி, சிதம்பரம்

ஸ்ரீ கர்மயோகி அவர்களின் புத்தகங்களில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ அன்னை முறைகளை பயன்படுத்தி செயல்பட்டதன் விளைவாக ஏற்பட்ட அனுபவங்கள்:

ஒவ்வொரு வருடமும் **Diary Season**-க்காக செய்ய வேண்டிய ஆர்டர்களை செப்டம்பர் மாத இறுதியில் செய்வதுண்டு. இவ்வருடமும் 2013 சீசன் ஆர்டர் 2012 செப்டம்பரில் ஆர்டர் கொடுத்துவிட்டேன். ஆர்டர் மதிப்பு சுமார் 70,000/- ரூபாய் இருக்கும். அதற்குமேல் தேவைப்பட்டால் உடன் வருவித்து விற்பனை செய்வதுண்டு.

சென்ற வருடம் 90,000/- ரூ. (2012) **sales** செய்து இருந்தேன். தானே புயலில் கடலூர் மாவட்டமே ஸ்தம்பித்த வேளையில் அன்னையிடம் சமர்ப்பணம் செய்து **diary**-களை 95% விற்றது சந்தோஷமாக இருந்தது. ஏனெனில் மற்ற கடைகளில் பாதிக்குமேல் தேங்கிவிட்டதாகச் சொன்னார்கள். இந்த வருடம் ஆர்டர் கொடுத்தபின் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்-கழகத்தில் நிதி நெருக்கடி, சம்பளக் குறைப்பு என **total sales** மிகவும் குறைந்து கஷ்டப்பட்ட நேரத்தில் அன்னையிடம் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்து நிலைமையைப் பூர்த்தி செய்து கொண்டு வந்தேன்.

**Jan.** 2013 மீண்டும் காலேஜ் திறந்து இயங்க ஆரம்பித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளக் குறைப்பு, நிதி நெருக்கடி காரணமாக **diary sales** முன்னேற்றம் இருக்காது என்ற பேச்சுகளால் பயம் வேறு. அந்த நேரத்தில் நமக்குதான் **Mother's Grace** இருக்கிறதே என்ற தெளிவான நம்பிக்கையில் மேற்படி அபிப்பிராயங்களை எல்லாம் கஷ்டப்பட்டு ஒதுக்கி வைத்துவிட்டு அன்னையிடம் **diary sales**-ஐ சமர்ப்பணம் செய்துவந்தேன். அந்த சமயத்தில் சிதம்பரத்தில் நடைபெற்ற ஓர் ஆன்மீக சொற்பொழிவிற்கு அழைப்பு வந்திருந்ததால் அதைக் காண ஆவல் ஏற்பட்டு கடையிலிருந்து ஒரு நாள் மாலை 6 மணிக்குச் செல்லத்



தயாரானபொழுது, அங்கு செல்ல முடியாதபடி **sales** நடக்க ஆரம்பித்தது. மீண்டும் அரை மணி நேரம் கழித்து செல்ல முயன்ற போது ஒருவர் **diary** வேண்டும், **model** காண்பியுங்கள் என்றார். அப்போது மனதில் ஒரு மாற்றம் கிடைத்தது. உடனே **bundle**-களைப் பிரித்து அனைத்து **model**-களையும் **display** செய்தோம். **Model** பார்த்தவர் உடனே ரூ. 2000/- மதிப்பிற்கு 20 **diaries** வாங்கிக் கொண்டார்.

சில நாட்கள் கழித்து எங்கள் கடையில் ரெகுலராக வாங்கும் **customer**-களைத் தேடிப் போய் **order** கேட்டேன். ஆனால் அவர்கள் இந்த வருடம் **diary** வாங்கவில்லை எனவும், பிறகு வாங்கிக் கொள்கிறோம் எனவும் காரணம் கூறினர். மறுபடியும் திகைப்பாக இருந்தாலும் அன்னை நினைவு மேலிட நம்மால் முடியாத போதுதான் அன்னை நினைவு வருகிறது என்று எண்ணி மனதை அமைதிப்படுத்திக் கொண்டேன். புதிய நபர்கள் மூலம் **diaries** விற்க ஆரம்பித்தது. **Corporate** கம்பெனி **(Power Plant) order** 60 **diaries** ரூ.7000/- மதிப்பிற்கு கிடைத்தது. அந்த கம்பெனியின் நபர் வாயிலாக ரூ.15,000/- ஆர்டர் கிடைத்தது. கவுன்ட்டர் **sales**-உம் மிகவும் துரிதமாக நடந்தது. நான் நினைத்து **(plan)** வைத்திருந்த வாடிக்கையாளர்களைத் தவிர புதிய வாடிக்கையாளர்களால் அதாவது அன்னையின் அருளால் வந்த வாடிக்கையாளர்களால் **sales** ஆனது மிகவும் பிரமிப்பாக இருந்தது. இவ்வாறாக **diary sales** ரூ.1,14,000/-ஐ எட்டியது.

இதைத் தொடர்ந்து மாம்பலம் தியான மைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு தியானம் முடிந்து கிளம்பும்முன் 150 **files folder** கேட்டு ஆர்டர் வந்தது. நான் கடையில் இல்லை. இருந்தாலும் அந்த மையத்தில் அன்னையிடம் கேட்டுக் கொண்டேன். உடனே எனக்கு போன் கால் மூலம் **file folders**-க்கு பதிலாக **pen set or pen drive** தேவை எனவும் **arrange** செய்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். அந்த ஆர்டர் பூர்த்தி செய்யத் தேவையான **item**-களை **phone** மூலம் தொடர்பு கொண்டு, கடையின் பணியாளர் மற்றும் எனது மகன் மூலம் **supply** செய்தோம். இந்த **order** மதிப்பு ரூ.17,000/- ஆகும். இந்த

நிகழ்வு மூலம் நான், என் ஸ்தாபனம் அனைத்தும் அன்னையின் அருட்சூழலில் உள்ளதாகப் புரிந்து கொண்டேன்.

இவ்வாறாக, என் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் ஸ்ரீ அன்னை அருள் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீ அன்னையின் முறைகளை பின்பற்றும் போது கிடைக்கும் பலன் மிகுதியாக இருந்தாலும் என்னுடைய பக்கம் தீவிரத்தை அதிகப்படுத்துதல் வேண்டும். அதைத் தொடர்ந்து செய்ய இயலவில்லை. இந்தக் கடிதம் எழுதும் தருணத்தில் மணிக்கொரு முறை அன்னை நினைவு என்பதை செய்திட வேண்டி எனக்குள் உறுதி கொள்கிறேன்.

ஸ்ரீ அன்னை வழிப்படி நடக்கவும், வாழ்வை அன்னை மையமாக நடத்தவும் காரணமாக உள்ள தங்களின் பாதம் பணிந்து நன்றி கூறுகிறேன்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பொதுவாக மனிதனுக்குத் தன் குறை தெரிவதேயில்லை. சில சமயங்களில் தன் பெருமையும் தெரியாமல் இருப்பது உண்டு. தம்மைப் பற்றித் தலைகீழாக நம்புபவர் பலர். தம்மிடம் உள்ள குறையைப் பிறரிடம் மட்டும் காண்பவர் சிலர். 'நான் உயர்ந்தவன். என்னால் பலரும் நன்மை அடைகிறார்கள் என்பது என் அபிப்பிராயம்' என்று நம்புபவர் இதுவரை தன்னுடன் இருந்தவர்கள் நிலையை நினைவுபடுத்திப் பார்த்தால் உண்மை புரியும். தன்னையே முழுமையாக அறியாத மனிதன் பிறரை அறியமுடியாது. சத்திய ஜீவியத்தில் மனிதன் தன்னைப் பூரணமாக அறிவான். அதேபோல், பிறரையும் பூரணமாக அறிவான். மனிதன் பிறர் வாழ்வில் கலந்து பூரிக்கிறான். சத்திய ஜீவன் பிறர் ஆத்மீக வாழ்வில் கலந்து வளர்கிறான்.

தான் ஒரு ஆன்மா என்று அறிந்த மனிதர் இல்லை. அது தெரிந்தால் அவர் ரிஷியாகி விடுகிறார்.

நல்லவனும் கெட்டவனும் தன்னை அறிந்து, பிறரையும் அறிய அன்னை ஜீவியத்தை ஏற்க வேண்டும்.



## அன்னை இலக்கியம்

## தாஜுதீன்

இல. சுந்தரி

அஜெண்டா

*மதம் என எனக்கு ஒன்றில்லை*
*மதம் என ஆரம்பித்தால்*
*வழி அடைபடும்.*

தமக்கு அன்னையளித்த தோட்ட வேலைகளைச் செம்மையாகச் செய்து முடித்து, மனதில் அன்னையை நினைத்து அர்ப்பணித்து ஆஸ்ரமத் திண்ணையில் வந்து அமர்ந்தார் சசிகாந்தன் என்ற ஆஸ்ரம சாதகர். இவருடன் அரவிந்தாஸ்ரமம் வந்து சமையலறையில் பணியேற்ற சர்மா, நெற்றியில் சந்தன, குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு சுலோகம் ஒன்றை ஜபித்துக் கொண்டிருந்தார்.

திண்ணையில் வந்தமர்ந்த சசிகாந்தனைப் பார்த்து, ''என்ன சசி! தியானம், ஜபம் ஏதும் கிடையாதா?'' என்றார்.

''எனக்கு அன்னையிட்ட பணிதான் தியானம், ஜபம் எல்லாம்'' என்றார் சசி.

''அது என்னவோ சசி, என்னதான் பணிகளைச் செய்தாலும் மந்திரம் ஜபிப்பதில் உள்ள சுகமே தனிதான். சுலோகம் சொல்லவில்லை என்றால் மனம் குறையாகவே உணர்கிறது'' என்கிறார் சர்மா.

''எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம். அன்னையே பராசக்தி. அவர் இட்ட பணிகளைச் செய்வதுதான் நாம் அவர்க்குச் செய்யும் பக்தி, நன்றி யாவும். இதற்குமேல் நாம் செய்ய என்ன இருக்கிறது'' என்றார் சசி.

''அன்னைதாம் அவரவர் சுபாவத்தை வலிந்து மாற்ற முயல வேண்டாம் என்று கூறியுள்ளாரே. பிறகு எதற்கு நீ இதைப் பெரிதுபடுத்துகிறாய்?'' என்கிறார் சர்மா.

‘‘அப்படியே பார்த்தாலும் நீர் போற்றும் கீதை என்ன சொல்கிறது. சகல தர்மங்களையும் விட்டுவிட்டுத் தன்னைச் சரணடைந்தவர் பொறுப்பைத் தாமே ஏற்பதாகக் கண்ணன் கூறுவதாகத்தானே கீதை சொல்கிறது.’’

‘‘பராசக்தியாக நீர் போற்றும் உமாதேவி என்ன செய்தார்? உலகை முதலில் சுற்றி வருபவர்க்கு மாங்கனி என்று அறிவித்தபின் தம்மையும், சிவனையும் சுற்றி வந்த கணபதிக்குக் கனியை கொடுத்துவிட்டாரே, அது ஏன்? அவர்களே அகிலம் என்பதுதானே அதன் பொருள். நாம் தேடும் இறைவன் நமக்குக் கிடைத்தபின் அவர் இட்டதைச் செய்வதைவிட வேறு தேவை என்ன இருக்கப் போகிறது?’’ என்கிறார் சசி.

‘‘நீ என்ன சொல்கிறாய்? எனக்குக் குழப்பமாகவுள்ளது’’ என்கிறார் சர்மா.

‘‘நீ பகவானை ஏற்றிருப்பது உண்மைதானே?’’

‘‘அதிலென்ன ஐயம் உனக்கு?’’

‘‘அவர் கூறிய சத்தியத்தை (அன்னையை) நீ பூரணமாக ஏற்கவில்லை என்பதால் நீ அவரையும் பூரணமாக ஏற்கவில்லை என்றுதானே பொருள்’’ என்கிறார் சசி.

சர்மா குழப்பமடைகிறார்.

‘‘சரி சர்மா! நான் உனக்கு ஒரு யோசனை சொல்கிறேன் கேள். அன்னை குழந்தைகளுக்காக நடத்தும் வகுப்பை ஓரத்தில் நின்றாவது வேடிக்கை பார்’’ என்கிறார் சசி.

அரை மனத்துடன் ஒப்புக் கொள்கிறார் சர்மா. எத்தனையோ சாதகர்கள், குழந்தைகளின் வினாக்களுக்கு அன்னை அளிக்கும் விடைகளை அறிந்து கொள்ள ஆர்வத்துடன் அவ்வகுப்பில் கலந்து கொண்டிருந்தனர். சர்மாவிற்குக் கலந்து கொள்ள விருப்பமில்லை. ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்னையின் குழந்தைகளுக்கான வகுப்பு நடைபெறுகிறது. சில பெரியவர்களும் வகுப்பில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.



சர்மா என்பவர் (சமையலறையில் பணிபுரியும் சாதகர்) மட்டும் ஓர் ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்.

‘‘இனிய அன்னையே! விவேகானந்தர் போன்ற ஞானம் பெற்றவர்களை விட்டுவிட்டு எங்களைப் போன்ற ஒன்றுமறியாதவர்களை ஏன் தேர்ந்தெடுத்துள்ளீர்’’ என்று ஒரு குழந்தை கேட்கிறது.

‘‘ஓ! அதுவா! ஓரளவு சித்தி பெற்றவர்கள் அதற்குமேல் செல்ல ஒன்றுமில்லை என்று நின்று விடுவார்கள். அவர்களைச் செயல்படுத்துவது இயலாது’’ என்கிறார் அன்னை.

சுரீரென ஏதோ மனதில் தைக்கிறது சர்மாவிற்கு.

அப்போது பரூக் என்பவர் தம் மகனையும் வகுப்பில் சேர்த்துக் கொள்ளுமாறு அனுமதி கேட்டு வருகிறார். அன்னை புன்முறுவலுடன் தலையசைத்து அனுமதி தருகிறார்.

கள்ளமில்லாத புன்னகை தவழ இளம் சிறுவன் அன்னைமுன் வருகிறான்.

அன்னையும் முகம்மலர்ந்து, ‘‘வா குழந்தாய். உன் பெயரென்ன’’ என்று அன்புடன் வினவுகிறார்.

சிறுவனும் அதே மலர்ச்சியுடன், ‘‘என் பெயர் தாஜுதீன் அன்னையே’’ என்கிறான்.

‘‘நல்லது குழந்தாய். நீ ஏன் குல்லாய் அணியவில்லை?’’ என்கிறார் அன்னை.

‘‘உங்களிடம் வர அது தேவையில்லை என என் பாவா சொன்னார். அதனால்தான் அணியவில்லை’’ என்றான் சிறுவன்.

‘‘ஏன் அப்படிச் சொன்னார்?’’ இது அன்னை. ‘‘தெரியவில்லை அன்னையே’’ இது சிறுவன்.

‘‘சரி சரி! உட்கார்’’ என்று அவனை வகுப்பில் உட்கார வைத்துக் கொண்டார்.

''அன்னையே! நீங்கள் வகுப்பில் என்ன சொல்லித் தருகிறீர் என்று மற்றவர் கேட்டால் என்ன சொல்வது'' என்று மற்றொரு சிறுவன் கேட்கிறான்.

''ஓ! அப்படியா? அன்னை சொல்வதைச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை என்று சொல்லிவிடு'' என்கிறார் அன்னை.

மீண்டும் இன்னொரு புதியவர் ஒரு சிறுவனை அழைத்து வந்து, அவனையும் அவ்வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என அனுமதி கேட்கிறார்.

அன்னை தலையசைத்து அனுமதியளிக்க ஓரிளம் சிறுவன் அன்னைமுன் வருகிறான்.

''வா குழந்தாய் வா. உன் பெயரென்ன என்று கனிவுடன் கேட்க என் பெயர் ஈஸ்டர் அன்னையே'' என்கிறான் சிறுவன்.

''ஓ! நீ கிருஸ்துவ அன்பனா? நல்லது உன் கழுத்தில் அணியும் சிலுவையைக் காணவில்லையே. தொலைத்து விட்டாயா?'' என்கிறார் அன்னை.

''தொலைக்கவில்லை அன்னையே. உம்மிடம் வர அது தேவையில்லை என்று என் தாத்தா சொன்னார். அதனால்தான் அணியவில்லை'' என்கிறான் சிறுவன்.

''கண்ணா! சிவா! நீங்களும்கூட உங்கள் மதத்தின் சின்னமான திருமண்ணும், திருநீறும் அணியவில்லை, ஏன்'' என்கிறார் அன்னை.

''எங்கள் பெற்றோர் உம்மிடம் வர அவை தேவைப்படாது என்று கூறியதால் நாங்கள் அவற்றை அணியவில்லை'' என்றனர் சிறுவர்.

''அப்படியா? ஆனால் அதன் காரணம் என்ன என்று யாருக்கேனும் தெரியுமா?'' என்கிறார் அன்னை.

ஒருவரும் பதில் சொல்லவில்லை. சர்மா உள்ளே பொருமுகிறார். ''உங்களுக்கு மதமெல்லாம் பிடிக்காது என்றுதான்'' என்று அவர் தமக்குள் சொல்லிக் கொள்கிறார்.



உடனே அன்னை, சர்மாவைக் குறும்பாய் பார்க்கிறார்.

''நான் என் மனதிற்குள்தானே பேசிக் கொண்டேன். அதுவும் இவர்க்குத் தெரிந்து விட்டதா'' என்று நினைக்கிறார் சர்மா.

''யாருக்கேனும் தெரியுமா? பவித்ரா என்ன காரணம் என்று சொல்லமுடியுமா?'' என்று பவித்ராவை நோக்கி அன்னை கேட்கிறார். பவித்ரா தயங்குகிறார். '' தயங்காமல் சொல்'' என்று அன்னை உற்சாகப்படுத்துகிறார்.

''புறச்சின்னங்கள் மதத்தை அடையாளங்காட்டும் அடையாள சின்னங்கள். தாங்கள் ஆன்மாவிற்குரியவர். மதம் குறுகிய வாய்க்கால் போன்றது. ஆன்மீகம் அகண்ட சமுத்திரம். சமுத்திரத்தில் மூழ்கிட இந்த அடையாளங்கள் தேவையில்லை அல்லவா? பள்ளியில் படிக்கும் போது ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு அடையாள அட்டை உண்டு. அதை மாணவர்கள் கழுத்தில் அணிய வேண்டும். பள்ளிக் கல்வி முடித்தபின் அடையாள அட்டை தேவையில்லையே. அது போலவே இங்கு மதம் கடந்த தங்களைச் சேர அந்தச் சின்னங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்'' என்றார் பவித்ரா.

அதைச் சிரத்தையாய்க் கவனித்த அனைவரும், ''ஆம் அன்னையே! அவர் கூறுவது சரி என்றுதான் தோன்றுகிறது'' என்றனர்.

ஏனோ சர்மாவிற்கு இதில் உடன்பாடில்லை. சந்தனம் குழைத்துப் பூசி, வாய் நிறைய சுலோகம் ஜபிப்பதில் உள்ள திருப்தி இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது என்று அவர் மனம் பேசுகிறது.

''பவித்ரா! இறைவனை துதிப்பதைத் தவறு என்றா சொல்கிறாய்?'' என்று குறும்பாய்க் கேட்கிறார் அன்னை.

''அப்படியில்லை அன்னையே, இறைவனைத் தேடி துதிபாடி நிற்கிறோம். இறைவனின் சாந்நித்யம் கண்டபின் பிரமித்து நிற்போம். மேலும் இறைவன் நம் போற்றுதலாலோ தூற்றுதலாலோ எவ்வித பெருமையும் அடைவதில்லை.

பிராணலோக ஜீவர்களே தம்மைத் துதிப்பதில் பெருமை கொள்ளும் என்று நீரே கூறியுள்ளீரே'' என்கிறார் பவித்ரா.

''அப்படியென்றால் இங்கு தெளிவு வேண்டியவர்களுக்கு (சர்மாவை நோக்கி விட்டு) என்ன சொல்ல நினைக்கிறாய்?'' என்கிறார் அன்னை.

''நம் பிரபு சாவித்ரி காவியம் மூலமாக இங்கு பராசக்தியே மனிதச் சட்டை அணிந்து புவியில் வெளிப்பட்டதாய்க் கூறியபின், எளிய, தாய் வடிவில் நீங்களே வந்தபின் நாங்கள் துதித்துத் தேட என்ன இருக்கிறது? தங்கள் அருளைப் புறக்கணிக்காமல் பெறுவது ஒன்றே நாங்கள் செய்ய வேண்டியது'' என்கிறார் பவித்ரா.

சர்மாவுக்கு ஏதோ சிறிது தெளிவு வருவது போல் தோன்றுகிறது. எனினும் முழுமை இல்லை.

அன்னையின் வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தோன்றியது.

மறுநாள் சர்மா தாமே அன்னையின் குழந்தைகளுக்கான வகுப்பிற்கு வந்து ஓரமாய் நின்று கொண்டார்.

அன்னை அவரைப் பார்த்து இலேசாகப் புன்னகை செய்தார். பதிலுக்கு என்ன செய்வதெனப் புரியாது தயங்கி நின்றார்.

''தாஜுதீன்! உன் தந்தை கடைத்தெருவில் பிரியாணி ஹோட்டல் வைத்திருக்கிறார் அல்லவா?'' என்கிறார் அன்னை.

''ஆம் அன்னையே!'' என்று உற்சாகமாய்க் கூறுகிறான் சிறுவன்.

''அதில் பணி செய்ய நிறைய ஆட்கள் உள்ளனரா? அவர்கள்தாம் உணவு தயாரிப்பார்களா?''

''இல்லை அன்னையே. இப்போதுதான் பணியாட்கள் அதிகம். முதலில் கடை தொடங்கிய போது அப்பாவே எல்லா வேலையும் செய்வார்.''

''என்னவெல்லாம் சமைப்பார்?''



விதவிதமான அசைவ உணவு வகைகளின் பெயர்களைச் சிறுவன் கூற சர்மா முகம் சுளிக்கிறார்.

''ஓ! இவையெல்லாம் தயாரிக்க உனக்கும் தெரியுமா?''

''தெரியும் அன்னையே! ஆட்கள் வராத நாட்களில் நானும் என் அப்பாவுமே எல்லாம் தயாரிப்போம்'' என்று ஏக உற்சாகத்துடன் சிறுவன் கூற, சர்மாவுக்கு எரிச்சல் வருகிறது. ஆன்மீகத்தில் கோழிபிரியாணிக்கு என்ன வேலை. அன்னை அநாவசியமாய் இதைப்பற்றியெல்லாம் பேசுவதாக நினைக்கிறார்.

*[நம்மை உள்ளே நாமறிய வேண்டும். நல்லதற்குப் பெருமைப்படுவதும், கெட்டதற்கு வெட்கப்படுவதும் எரிச்சல்* (reaction) *படுவதாகும். அன்னை தருவது உலகம். - ஸ்ரீ கர்மயோகி, மலர்ந்த ஜீவியம், ஆகஸ்ட் 2010, அன்பு அமிர்தமாகி...]*

''தாஜுதீன்! நீ சர்மாவுக்குச் சமையலில் உதவி செய்கிறாயா?'' என்கிறார் அன்னை. சிறுவனும் மிகுந்த உற்சாகத்துடன் அன்னை தம் திறமையைப் பாராட்டுவதாக உணர்ந்து, 'செய்கிறேன் அன்னையே' என்கிறான்.

ஏற்கனவே சர்மா பிரியாணி ஹோட்டல் பற்றி வெறுப்படைந்த நிலையில், தாஜுதீன் தமக்குச் சமையலில் உதவுவது மேலும் வேதனை அளித்தது. வேண்டாம் என்று சொல்லவும் முடியாது மனம் தவித்தார் சர்மா.

மறுநாள் சிறுவன் தாஜுதீன் சமையலில் உதவி செய்ய ஆர்வமாக வந்துவிட்டான். சர்மா சுத்த சைவம். சிறுவன் கோழியை, ஆட்டை அறுத்த கையால் உதவுவது நினைக்கவே அருவருப்பாய் இருந்தது. எனவே, மனதில் அவனை மறுத்து ஒரு வேலையும் தராமல் அவனைப் புறக்கணித்தார். சிறுவனோ எவ்வித சலிப்பும் இன்றி பொறுமையாய்க் காத்திருந்தான். தான் அவனைப் புறக்கணித்தால் அவனே போய் விடுவான் என்று நினைத்தார் சர்மா.

ஒரு நாள், எதிர்பாராத நேரத்தில் அன்னை வந்தார். இவர் வருவது தெரிந்ததும் சர்மா சற்று உரத்த குரலில், ''தாஜுதீன்

இந்தா, இதை அங்கே வை'' என்று தேவையற்ற ஒரு வேலையைக் கூறினார். சிறுவனோ சற்றும் சளைக்காமல் பிரியமாக அவர் கூறியதைச் செய்தான். அன்னை அங்கு வந்து 'என்ன தாஜுதீன் சர்மா சொல்வது போல் செய்கிறாயா?' என்கிறார் குறும்பாக.

சிறுவன் மிகுந்த பணிவுடன்,'ஆமாம் மதர்' என்கிறான்.

அன்னை சிரித்துக் கொள்கிறார்.

அன்னை சென்றபிறகு, சர்மா சிறுவனை அழைத்து, ''ஏனப்பா நான்தான் உன்னை உதவிக்குச் சேர்த்துக் கொள்ளவேயில்லையே, நீ ஏன் அன்னையிடம் அதைச் சொல்லவில்லை?'' என்கிறார்.

''என் பாவா என்னை இங்குக் கொண்டு விடும் போதே, அன்னை என்ன சொல்கிறாரோ அதைத் தவறாது செய்ய வேண்டும், யாரோடும் சண்டையிடக் கூடாது, கோள் சொல்லவும் கூடாது. அது அன்னைக்குப் பிடிக்காது. ஒற்றுமைதான் அன்னைக்குப் பிடிக்கும் என்று சொல்லி-யிருக்கிறார்' என்றான் சிறுவன்.

''அன்னைக்கு எது பிடித்தால் நமக்கென்ன? நமக்குப் பிடிக்க வேண்டாமா?'' என்கிறார் சர்மா.

''அன்னையைப் பிடித்ததால்தான் இங்கு வந்தேன். அவர்க்கு எது பிடிக்குமோ அதுதான் எனக்கு மகிழ்ச்சி தருகிறது. உங்களுக்கு என்னைப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும் மாமா. ஆனால் அதைநான் அன்னையிடம் சொல்ல மாட்டேன்'' என்றான் சிறுவன்.

''சூஆ'' என்று கத்தியவண்ணம் தலையைப்பிடித்துக் கொண்டார் சர்மா.

'என்னாயிற்று மாமா' என்று சிறுவன் பதறினான்.

சற்றுமுன்வரை தான் வெறுத்த குழந்தை தன்மீது அன்பு கொண்டு பதறியது சர்மாவின் நெஞ்சை உலுக்கியது.



''தலையில் ஏதோ பாரமான பொருள் விழுந்தது போல் உணர்ந்தேன்'' என்றார் சர்மா.

'உங்களுக்கு ஒன்றுமில்லையே மாமா' என்று கவலையுடன் கேட்டான் சிறுவன்.

''ஒன்றுமில்லை கண்ணா. இனி எனக்கு ஒன்றும் ஆகாது. நீ என் மனக்கண்ணைத் திறக்க அன்னை அனுப்பிய தெய்வம். எனக்கு ஏதோ புரிவது போல் மகிழ்ச்சியாய் இருக்கிறது. என் மனத்தில் மண்டிக் கிடந்த அழுக்கை உன் அன்பால், பொறுமையால் அழித்து விட்டாய். உன் மனம் சுத்தம். நாளை முதல் நீதான் எனக்குச் சமையலில் உதவ வேண்டும். இந்தக் கைகளால் நீ பொருட்களை எடுத்துத் தரவேண்டும்'' என்று, எந்தக் கைகளை ஆட்டுக் குருதியும், கோழிக் குருதியும் என்று ஒதுக்கினாரோ அதே கைகளை மிகுந்த அன்புடன் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டு, சிறுவனை அணைத்துக் கொள்கிறார்.

மறுநாள் சர்மா தாஜுதீனின் வரவிற்கு ஆவலுடன் காத்திருக்கிறார். சிறுவன் வந்திலன். அவனைத் தேடி சர்மா அங்கும் இங்கும் போகிறார்.

''அன்னை அங்கு வந்து யாரைத் தேடுகிறாய்?'' என்கிறார்.

மிகுந்த குற்றவுணர்வுடன் ''தாஜுதீனைத் தேடுகிறேன்'' என்கிறார் சர்மா.

''இனி அவனுக்கு அவசியமில்லை'' என்று சிரிக்கிறார் அன்னை.

சர்வாங்கமும் ஒடுங்கி அவர் திருப்பாதங்களில் விழுகிறார் சர்மா.

திருவுருமாறிய சர்மாவை அன்னை அன்புடன் எழச் செய்து ஆசீர்வதித்தார்.

**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No. IV. Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Puducherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mr. S. Devanathan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Sakthi Offset Printers,<br>No. 238, Lawspet Main Road,<br>Pakkamudayanpet, Puducherry - 605 008. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Sankar** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Flat No. 11, 2nd Floor, Grace Apartments,<br>177, Pappammal Koil Street,<br>Vaithikuppam, Puducherry - 605 012. |
| 5. | Editor's Name | : | **Mr. N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn., Puducherry - 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital | : | **The Mother's Service Society**<br>5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn.,<br>Puducherry - 605 011. |

I, (P.V. Sankar) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Sd . . . . . . . . . . . . . . . . . .

(P. V. Sankar)

Date: 01-03-2015

Signature of the Publisher.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# அன்பர் மனநிலை அனைவரையும் ஏற்கும் உளநிலை

வாழ்வில் குடும்பம் மையமானது. குடும்பம் கட்டுப்பாட்டால் வளரும். கட்டுப்பாடு என்பது முறை, நெறி, ஒழுங்கு. நல்ல குடும்பப் பண்பு, காலை 8 மணிவரை தூங்குவது சரியில்லை. ஞாயிறன்று 9½ வரை தூங்கினால் முறையாகாது. இனிமையாகப் பேச வேண்டிய நேரம் காரமாகப் பேசினால் அது தன்மையில்லை. மனைவி வேலைக்குப் போய் சம்பாதிக்கலாம். அதை வலியுறுத்தக் கூடாது. பணம் வற்புறுத்தச் சொல்லும். தனக்கொரு சட்டம், குழந்தைகட்கு வேறு சட்டம் நீடிக்காது. அன்னை முறைகள் உயர்ந்தவை. அவற்றை முழுவதும் கடைப்பிடிக்காவிட்டாலும், முழுவதும் கடைப்பிடிக்க முயல்வது அவசியம். ஆதாயத்திற்காக அன்னையைப் பின்பற்றுவது மனம் மலரும் நிலையல்ல. நல்லதைச் செய்ய வேண்டும். அதை அன்னைக்காகச் செய்வது அழகு. ‘‘இதெல்லாம் பிழைக்கும் வழியில்லை. நடப்பதைப் பார். கேட்டால்தான் கிடைக்கும். கொட்டினால்-தான் தேள்’’ என்ற மனநிலை விரும்பத்தக்கதல்ல.

கணவன் மனைவியை வேலைக்குப் போகச் சொல்லி கட்டாயப்படுத்துகிறான்.

வீட்டு வேலையும், ஆபீஸும் சேர்ந்து அவளுக்குச் சமாளிக்க முடியவில்லை.

பையனின் தாயார் அன்னை அன்பர். தாயாரைக் கலந்தான்.

*‘‘வற்புறுத்தாதே, கேட்காதே, எதிர்பார்க்காதே, கடமையைச் செய்’’ என்றார் தாயார்.*

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

போனஸ் வரவில்லை, கேட்க நினைத்தான், கேட்கவில்லை.

வீடு கட்ட பணம் வேண்டும், எண்ணத்தை மனத்தினின்று அகற்றினான்.

கம்பெனி மீட்டிங்கிற்காக USA சென்றான்.

‘‘போனஸ் கேட்காதே’’ என்பது தாயார் உத்தரவு.

கம்பெனி மனைவியை USA அழைத்து வரச் சொல்லியது.

விமானத்தில் சீட் Business class-க்கு மாற்றப்பட்டது.

எல்லா நாட்டு ஆபீசர்களில் இவரை மட்டும் பிரசிடென்ட் தன் வீட்டிலிருக்கச் சொன்னார்.

கணவன் மனைவிக்கு Disney Land-க்குப் போய் வர கம்பெனி பணம் கொடுத்தது.

ஒரு I Phone, I Pad பரிசாகக் கொடுத்தனர்.

*இவற்றைக் கண்ணுற்றபின் போனஸ் கேட்பது தவறு என அவருக்குப் பட்டது.*

புறப்படும்முன் President வழக்கமான 5 இலட்ச ரூபாய் போனஸை இவருக்கு 8 இலட்சமாக்கியதாகக் கூறினார்

இந்திய பிராஞ்சுகளின் தலைவராக அவரை நியமித்தார்கள். அதை ஆசிய தலைமையாக உயர்த்தினர். சம்பளம் இருமடங்காகியது.

‘‘இந்தியக் கம்பெனியால் முழு கம்பெனிக்கும் நல்ல பெயர்’’ என்று President கூறினார்.

*நல்லதைச் செய்வது நல்லது. அதை அன்னைக்காகச் செய்வது அழகு.*